பக்கங்கள்: 20

# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை

தீ : 03 | புனல்:23 | 30.09.2023 சனிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054



சாகித்திய ரத்னா விருது பெற்றிருக்கும் இலக்கியப் படைப்பாளி க.சட்டநாதன்

முருகபூபதி

பக்கம் 07



தும்பாட்டி பிரதேசத்தின் பண்டார வன்னியன் நாடகக்கூத்து

ரதிகலா உதயகுமார்

பக்கம் 08

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து எதிர்கொண்டுவந்த உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.


இது குறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு,

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவும, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றிற்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதேவேளை, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண்காணித்து வந்தனர். சட்டமா அதிபர், என்னை (முல்லைத்தீவு நீதிபதியை) தனது அலுவலகத்தில் 21.09.2023 ஆம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர் மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார். குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு (முல்லைத்தீவு நீதிபதிக்கு) எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன். இது குறித்த பதவி விலகல் கடிதத்தினை கடந்த 23.09.2023 அன்று பதிவுத் தபால் ஊடாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்று தெரிவித்தார். அவர், தன்னுடைய பதவி விலகலை அறிவித்தபின்னர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரியவந்துள்ளது. ■

# நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல், அழுத்தம் நாட்டைவிட்டு வெளியேறினார்





Judge Chamber No: 021-2290010
Registrar No: 021-2290009
Fax No: 021-2290009

My No: DC/MC/Mull/2023
Your No:

දිසා/ මහේස්ත්‍රාත් අධිකරණය මුලතිව්
மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம், முல்லைத்தீவு.
DISTRICT /MAGISTRATE'S COURT, MULLAITIVU.

23.09.2023

Hon. Secretary,
Judicial Services Commission,
Colombo 12.

RESIGNATION LETTER

I hereby inform you that I resign my post of District Judge, post of magistrate, post of family court Judge, post of primary court Judge, post of small claims court Judge, post of Juvenile court Judge due to threat of my life and due to lot of stress.

Please accept my resignation.

Thank you.

T.Saravanarajah
District Judge & Magistrate
District & Magistrate's Court
Mullaitivu.

# கிளிநொச்சியின் எதிர்காலம் 10

கருணாகரன்





முன்னுதாரணமான சில செயல்களே வரலாற்றின் போக்கை மாற்றி, அவற்றை ஒரு பண்பாடாக ஆக்கி விடுவதுண்டு. இவையே பண்பாட்டுத் தளைகளை உடைத்துப் புதிய பண்பாட்டை வளர்த்துச் செல்வதற்கு உதவுகின்றவையும் கூட. ஆனால், அந்தச் செயல்களுக்கு நிகழ் காலத்தில் அதிக வெளிச்சம் கிடைப்பதில்லை. அதை வெளிச்சப்படுத்துவதும் பாராட்டுவதும் முன்னுதாரணமாகக் கொள்வதும் அறிவார்ந்த செயலாகும்.

அறிவார்ந்த செயலென்பது, எதையும் தீர்க்க தரிசனமாக (தூரநோக்கில்) முன்னுணர்வதுடன் அதைத் துணிச்சலாக முன்வைப்பதுமாகும். அப்படி முன்னுதாரணம் கொள்ளக் கூடிய செயலொன்றாக அண்மையில் இயக்கச்சியில் கிராமிய உழைப்பாளர்களுக்கான மதிப்பளிப்பு நடந்தது. இதன்போது கள்ளிறக்குவோர் அல்லது சீவல் தொழில் அல்லது பனை, தென்னை வளங்களில் தொழில் செய்வோர், விவசாயிகள், சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் என பதினைந்து பேர் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த மதிப்பளிப்புக்குக் காரணம், நியாயமான முறையில் உழைத்து வாழ்வோரையும் அநீதியான முறையில் செயற்பட்டு வாழ முற்படுவோரையும் வேறுபடுத்திக் காட்டுவது. அத்துடன், நியாய உழைப்பாளர்களை முன்னுதாரணமாக்குவது என்பதாகும்.

பச்சிலைப்பள்ளியில் (இது தனியே பச்சிலைப்பள்ளியில் மட்டுமல்ல, வேறு இடங்களிலும் நடக்கிறது என்பது உண்மையே) சட்டவிரோத மணல் அகழ்வு, காடழிப்பு, பனை அழிப்பு, கசிப்பு உற்பத்தி, போதைப்பொருள் விநியோகம் என ஒரு தொகுதியினர் தவறான வழியில் ஈடுபட்டுச் செல்வந்தர்களாகவும் குறுக்கு வழியில் அதிகாரம் உள்ளோராகவும் மாறி வருகின்றனர். இதற்கு பாடசாலை மாணவர்கள் உட்பட இளைய தலைமுறையினர் பயன்படுத்தப்படுகின்றனர். இந்த இளைய தலைமுறையினருக்கு பியர், கஞ்சா, கசிப்பு போன்ற போதைப்பொருட்களைக் கொடுத்து தம் வசப்படுத்துகின்றனர் இந்தச் சூழல் கேடாக்கிகள்.

இந்தச் சூழலில், இதற்கு மாற்றாக நேர்மையான உழைப்பாளர்களை அடையாளப்படுத்த வேண்டும். அவர்களை மதிப்புச் செய்ய வேண்டும். அத்தகையானோரை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களைப் பிறரும் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சூழல் கேடாக்கிகளுக்கு எதிரான உணர்வும் வேறுபாடும் மக்களிடம் புலப்படும்.

மேற்சொல்லப்பட்ட சட்டவிரோத மணல் அகழ்வு, காடழிப்பு, பனை அழிப்பு, கசிப்பு உற்பத்தி, போதைப்பொருள் விநியோகம் போன்றவற்றைச் செய்வோர்தான் இப்பொழுது அரசியல் தரப்புகளிலும் பொலிஸ் மற்றும் நிர்வாகத் தரப்புகளிலும் செல்வாக்குடன் உள்ளனர். இதற்குக் காரணம், இவர்களிடம் தாராளமாகப் பணம் புழங்குகிறது. இரண்டாவது, அடியாட்கள் தாராளமாக உள்ளனர் என்பது.

ஆனால், நியாயமான முறையில் உழைத்து வாழ்வோருக்கு செல்வாக்குக் குறைவு. அவர்களுக்கான சமூக மதிப்பை சமூகப்பற்றாளர்களும் சூழலியலாளர்களும் நேர்மையான அரசியல்வாதிகள், நிர்வாக அதிகாரிகளும்தான் வழங்குவர். ஆனால், அது மிகமிகக் குறைவானது. இந்த நிலையில்தான் இவ்வாறான உழைப்பாளர்களுக்கான மதிப்பளித்தல் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த அரும்பணியைச் செய்தது, “இராவணன் வனம்” என்ற பேரில் தாவரவியல் பூங்காவை அமைத்து வரும் பொன் சுதன் தலைமையிலான நிர்வாகத்தினர்.

“நாம் அனைவரும் சமத்துவமானவர்கள் என்ற உணர்வுடன் வாழ வேண்டும். சமூக சமத்துவமே எங்கள் சமூகத்தையும் எமது பண்பாட்டையும் வளர்த்துச் செல்லும். தொழில்களில் ஏற்ற இறக்கம் என்று எதுவும் கிடையாது. அனைத்துத் தொழிலும் மதிப்புக்குரியனவே. ஒரு சமூகத்தின் இயங்கு நிலைக்கு அனைத்து தொழில்களும் தேவை. அனைத்து தொழில் செய்வோரும் அவசியம். சமூகத்துக்கு மட்டுமல்ல, தனி மனிதர்களுக்கும் இது தேவையானது. ஆகவேதான் அனைத்துத் தொழிலாளர்களையும் நாம் ஒரே நிலையில் நோக்குவது அவசியமாகும். வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சமூகங்களிலும் தொழில் ரீதியாக எந்த மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. அங்கே மனித நடத்தைகளே மதிப்பீடு செய்யப்படுகிறது.

“தவறான முறையில் செய்யப்படுவது எதுவும் தொழில் அல்ல. அது கொள்ளை அல்லது மோசடியாகும். அல்லது அது நிர்வாக துஷ்பிரயோகம். அதுதான் இங்கே நடக்கிறது. அப்படியானவை சமூகத்துக்கும் மக்களுக்கும் தேசத்துக்கும் இழைக்கப்படும் அநீதிச் செயல்களாகும். அதை மக்களாகிய நாம் ஒரு போதும் அனுமதிக்கவும் கூடாது. ஏற்றுக் கொள்ளவும் முடியாது” என்று இந்த நிகழ்வில் தெரிவித்தார் இராவணன் வனம் தாவரவியல் பூங்காவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.பொன் சுதன்.

அவர் தொடர்ந்து கூறும்பொழுது, “இந்த மதிப்பளிப்பானது, செய்யும் தொழிலே தெய்வம் என்ற உணர்வுடன், தங்களுடைய கடினமான உழைப்பினால் நேர்மையான முறையில் தமது தொழில்களைச் செய்து வருவோருக்கு நாம் வழங்குகின்ற சிறிய பரிசாகும். ஆனால், அவர்களுடைய வாழ்நாளில் இது அவர்களுடைய நேர்மைக்கும் உழைப்புக்கும் நாம் வழங்கும் பெரிய மதிப்பாகும். இதேவேளை இயற்கை வளத்தைக் கொள்ளையடித்து வருவாயை ஈட்டுவோர் ஊரின் அழிவுக்கே வழி வகுக்கின்றனர். இன்று சட்டவிரோத மண் அகழ்வினால் நிலத்தடி நீர் கெட்டுப் போகும் ஆபத்து உருவாகியுள்ளது. கசிப்புக் காய்ச்சுவோரினால் இளைய தலைமுறையே அழிவிற்குள்ளாகியுள்ளது. மணல் அகழ்விலும் அதிகமாக இளைய தலைமுறையினரே ஈடுபடுகின்றனர். ஆனால், இதைக்குறித்த சமூக விழிப்புணர்வு இல்லை என்பது கவலைக்குரியது. பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையில் மக்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். அதிகாரிகளும் சட்டத்துறையும் கையாலாகாத நிலைக்குள்ளாகி விட்டதைக் காண்கிறோம்” என்றார்.

திரு.சுதன் குறிப்பிட்டவை மறுக்க முடியாதவை மட்டுமல்ல, கவனம் கொள்ளப்பட வேண்டியவையும்கூட. அவர் பகிரங்கமாகவே அரசியல் தரப்பினரையும் சட்டம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்குப் பொறுப்பானோரையும் நிர்வாக அதிகாரிகளையும் குற்றம் சாட்டியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டு ஒன்றும் தனிப்பட்டதோ தனிநபர் என்ற அளவில் சுருக்கிப் பார்க்கக் கூடியதோ இல்லை. இந்தக் குற்றச்சாட்டு பொதுவானது. மக்கள் அனைவருடைய மனதிலும் உள்ளது. அதுவும் கொதிப்புடன் உள்ளது.

ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் அல்லது ஒவ்வொரு பிரதேசங்களிலிருந்தும் வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. பகிரங்கமாகவே இந்தக் கொள்ளை நடக்கிறது. இதை அந்தந்த ஊர்களில் உள்ள கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட பிரதேச ரீதியாக இருக்கும் பொலிஸ், மாவட்ட நீதி மன்றுக்கள், பிரதேச செயலர்கள், மாவட்ட அரச அதிபர்கள், கனிய வளத்திணைக்களத்தினர், பிரதேச சபையினர், சுற்றுச் சூழல் அதிகார சபையினர், வனத்திணைக்களத்தினர் என அனைவரும்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். போதாக்குறைக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற மக்கள் பிரதிநிதிகளும் அரசியல்கட்சிகளின் அமைப்பாளர்களும் உள்ளனர். அங்கங்கே சில தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இந்தக் கொள்ளையும் சூழல் கேடும் நிறுத்தப்படவில்லை.

இவர்கள் தமக்கு ஏற்ற வகையில் பொலிஸ், சட்டத்துறை மற்றும் நீதித்துறை, நிர்வாக அதிகாரிகள் போன்ற தரப்புகளை எல்லாம் வளைத்துப் பயன்படுத்துகின்றனர். எவரெல்லாம் சட்டத்தையும் நீதியையும் நிர்வாகத்தையும் பயன்படுத்தி, அவற்றின் அதிகாரத்தைக் கொண்டு கட்டுப்படுத்த வேண்டுமோ அவரெல்லாம் அதை விட்டு சட்டவிரோதிகளுக்கும் சமூகவிரோதிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். அல்லது சட்டவிரோதிகளுக்கு அனுசரணையாளராகவும் பங்குதாரராகவும் செயற்படுகின்றனர்.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com
தீம்புனல் THEEMPUNAL

# குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல்

செப்ரெம்பர் 8 ஆம் திகதி, மாவத்தகமவைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமி, அவரது சொந்தத் தந்தையினால் கடுமையாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், சில வாரங்களுக்குப் பிறகும் சந்தேக நபரைப் பிடிக்க காவல்துறை பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது. மாஜிஸ்திரேட் நீதி மன்றங்களில் 33% வழக்குகள் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்பு வழக்குகளுடன் தொடர்புடையவை என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் ஒருமுறை கூறினார்.

ஆனால், 1989 இல் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் மாநாட்டை ஏற்றுக்கொண்ட ஒரு நாடு அதன்பின் மார்ச் 1991 இல் அங்கீகரிக்கப்பட்டது. அதன் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியளிக்கத் தவறிவிட்டது.

பெருகிவரும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை கட்டுப்படுத்த முடியாத நாட்டின் இயலாமைக்கு எரியூட்டும் சாம்பல் பகுதிகளில் ஒன்று பாலியல் கல்வியின் பற்றாக்குறை ஆகும். அன்றிலிருந்து கல்வி சீர்திருத்தங்களை முன்வைத்து வரும் கல்வியாளர்களின் அவதானிப்பு இது. ஆனால், கலாசார மற்றும் மத நெறிமுறைகள் உள்ளூர் பாடத்திட்டங்களுக்கு பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துவதை எதிர்க்கிறது, அதன் மூலம் குற்றவாளிகள் தங்கள் குற்றங்களைத் தொடர ஊக்குவிக்கிறது. குழந்தைகளுக்கு அவர்களின் அந்தரங்க உடல் உறுப்புகள் தெரியாது என்பதும் தெரிந்த, தெரியாத நபர்கள் இந்த உடல் பாகங்களைத் தொடுவது சரி அல்ல என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதும் உண்மையில் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான தொடக்கப் புள்ளியாகும். இதை வீட்டிலேயே கற்பிக்க முடிந்தாலும் மோசமான வறுமை நிலைகளால் வாட்டி வதைக்கும் நாட்டில், உங்கள் குழந்தையின் உடல் உறுப்புகள் குறித்து கல்வி கற்பது முன்னுரிமையாக இருக்காது.

பல குழந்தைகள் தங்கள் பெற்றோர் தொலைந்து போனவுடன் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. தாய் வெளிநாட்டு வேலைக்குச் சென்ற குடும்பங்களில் இது பொதுவானது. குழந்தை, அது ஆண் அல்லது பெண் என்பதைப் பொருட்படுத்தாமல், தந்தை அல்லது தாத்தா பாட்டி அல்லது தொலைதூர உறவினருடன்கூட முடிந்து இறுதியில் இலக்காகிறது. குழந்தைகளை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கும் மற்றொரு காரணி வீட்டு முன் மோதல்கள் மற்றும் குடும்ப வன்முறை. “இதன் விளைவாக சிறுவர்கள் வயதுக்குட்பட்ட உறவுகளை வளர்த்துக்கொள்ளும் போக்கைக் கொண்டுள்ளனர்” என இலங்கை காவல் துறையின் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் பிரதிப் பொலிஸ் பரிசோதகர் (டி.ஐ.ஜி) ரேணுகா ஜயசுந்தர அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ‘சிறுவர் பாலியல் சுரண்டல் தடுப்பு’ என்ற தொனிப்பொருளில் தெரிவித்தார்.

ஆனால், துஷ்பிரயோகம் அல்லது துன்புறுத்தல் விடயத்தில், பல பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதுகாவலர்கள் பொலிஸில் புகார் செய்யத் தயங்குகிறார்கள். குற்றம் சாட்டப்பட்ட தரப்பினருக்கு எதிராக தடை உத்தரவைப் பெற சில தரப்பினர் நீதிமன்றங்களுக்குச் செல்வதை விரும்புவதில்லை. உடல்ரீதியான துன்புறுத்தலுக்கு கூடுதலாக, துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் குழந்தைகள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். மறுபுறம், பெற்றோர்கள் கூடுதல் திருமண உறவுகளைக் கொண்டிருந்தால், குழந்தை இலக்காகிறது. தாயின் காதலர் குழந்தையை பாலியல் ரீதியாக துன்புறுத்திய சம்பவங்கள் பல உள்ளன” என்று டி.ஐ.ஜி ஜெயசுந்தர கூறினார்.

குற்றம் சாட்டப்பட்ட தரப்பினருக்கு எதிராக சில தரப்பினர் நீதிமன்றங்களுக்குச் செல்வதை விரும்புவதில்லை. உடல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகும் குழந்தைகள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். மறுபுறம், பெற்றோர்கள் திருமணத்திற்கு புறம்பாக உறவு வைத்திருந்தால், குழந்தை இலக்காகிறது

குழந்தைகள் அனுபவிக்கும் உளவியல் அதிர்ச்சி பெரும்பாலும் மீள முடியாதது. இதன் விளைவாக அவர்கள் குறைந்த சுயமரியாதை, தன்னம்பிக்கை மற்றும் தனிப்பட்ட உறவுகளை பராமரிக்க முடியாது. தொடர்ந்தும் துஷ்பிரயோகம் செய்வதால் சிறுவர்கள் சில சமயங்களில் பாலியல் செயலிழப்பை சந்திக்க நேரிடும் என ஆலோசகர் குழந்தை மனநல மருத்துவர் டாக்டர் தர்ஷினி ஹெட்டியாராச்சி கூறினார்.

குழந்தைகளின் எதிர்காலம் தொடர்பாக மௌனம் காப்பதால் குற்றவாளிகள் தப்பிவிடுகிறார்கள். ■

# போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க தன்னார்வத் திட்டம் தேவை - பிரதமர்



ஆசிரியர் நியமனங்களை வழங்கும்போது மாகாணத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். 26.09.2023 அன்று அலரி மாளிகையில் மாகாண ஆளுநர்களுடனான சந்திப்பில் உரையாற்றிய அவர், போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கு தன்னார்வ வேலைத்திட்டம் அவசியம் என வலியுறுத்தினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதமர் மேலும் கூறியதாவது “நாட்டின் பொருளாதார, அரசியல் மற்றும் நிர்வாக நிலைமையை மேம்படுத்தும் வகையில் திட்டத்தை செயல்படுத்த வேண்டியது அவசியம். தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பல்பணி ஊழியர்களை வைப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதற்கு மாகாண சபைகளின் ஆதரவைப் பெற வேண்டும். இதை அரசு துறைகளால் மட்டும் செய்ய முடியாது. சில மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை மட்டுமே முடிக்க வேண்டியுள்ளது. இவர்களுக்கு முழுத்தகுதி இல்லை. சிறப்புப் பயிற்சி அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. பயிற்சிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையான நிறுவனத்தில் அவர்களை வைக்க நடவடிக்கை எடுக்கவும்.

ஆசிரியர் நியமனங்களில் சில சிக்கல்கள் உள்ளன. ஒவ்வொரு மாகாணத்திலும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் ஆசிரியர் நியமனத் திட்டம் வெற்றிகரமாக அமையும். தங்கள் வசிப்பிடத்திலிருந்து மாகாணங்கள் அல்லது மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட ஆசிரியர்கள் அந்தப் பள்ளிகளில் இருக்கக்கூடாது. சில பகுதிகளில் உபரி உள்ளது. எங்களின் ஒரே நோக்கம் மாணவர்களுக்கு கல்வி கற்பதுதான் அன்றி சலுகை இடமாற்றம் வழங்குவது அல்ல. அந்தந்த மாகாணங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் வகையில் அரசாங்க ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும் என உள்ளூராட்சி அமைச்சு அங்கீகரித்துள்ளது. இது சிறப்புக்கவனம் செலுத்தப்பட வேண்டும். நீதிமன்ற அபராதம், முத்திரை வருவாய், பிற இடமாற்றம் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் ஆகியவை உள்ளூர் அதிகாரிகளுக்கு குறைவாகவே அனுப்பப்படுகின்றன. அபிவிருத்திக் குழுக்கள் இதில் கவனம் செலுத்தி செலவுகளைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதியும் சூரிய சக்தியை அதிகரிக்கும் கொள்கையைக் கொண்டிருந்தனர். ஆனால், முன்னேற்றம் மிகவும் மெதுவாக உள்ளது. திட்டங்களை நடைமுறைப்படுத்த மாகாண சபைகள் மற்றும் மாவட்ட குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளின் டிஜிட்டல் மயமாக்கல் வருவாயை அதிகரிக்க வழிவகுக்கிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கமிஷனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் தொடர் கண்காணிப்பு மிகவும் முக்கியமானது.

சில சட்டவிரோத வருவாய் முறைகளை கவனிக்க வேண்டும். போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளது. பொலிஸாருடன் இணைந்து மாகாண மட்டத்தில் இது தொடர்பில் கவனம் செலுத்துங்கள். உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான உள்நாட்டுப் போரால் கொலைகள் எங்கு முடியும் என்பது நிச்சயமற்றது. இந்த நிலை கட்டுப்படுத்தப்பட வேண்டும். போரின் போது, பொது பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பொலிஸார் உஷார் நிலையில் இருந்தனர். அத்தகைய ஒரு தன்னார்வத் திட்டம் மீண்டும் தேவை. இந்தப் படிநிலைகள் மூலம் இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் வழங்கப்பட வேண்டும்.

சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இளைஞர்கள் இது தொடர்பில் புரிந்துணர்வுடன் இந்தப் போதைப்பொருள் தடுப்பு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இந்த நிலைமையை உடனடியாகக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர், சமூகங்களுக்கு இடையிலான அமைப்புகள், மதத் தலைவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும். ■



# சர்வதேசம் ஒரு 'மாயமான்'

தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு-முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது (2009)இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள்-காணாமல் போனவர்கள் விவகாரம் என்பவற்றிற்குச் சர்வதேச தலையீட்டை அல்லது விசாரணையைக் கோரிநிற்கின்ற போக்கு அண்மைக் காலமாக அதிகப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. கடந்தகால அனுபவங்களை வைத்துப் பார்க்கும்போது தமிழர் தரப்பு மனம் கொண்டிருக்கும் அல்லது கருதும் 'சர்வதேசம்' இக்கோரிக்கையினை எந்த அளவுக்குச் 'சீரியஸ்' ஆக எடுத்துக்கொள்ளுமோ தெரியவில்லை. 'சர்வதேசம்' என மொட்டையாகக் கூறுவது நடைமுறையில் 'இல்லாத ஊர்' போலவும் 'சர்வதேச தலையீடு' என்பது அந்த இல்லாத ஊருக்குப் பயணிப்பது போலவும் ஒரு மயக்கத்தையும் கொடுக்கிறது.

சர்வதேசத் தலையீட்டுக் கோரிக்கைகளின் பின்னணியில் உள்ளூர்த் தேர்தல் மற்றும் கட்சி அரசியல் தேவைகளும் காரணங்களும் இருப்பதாகக் கருதப்பட்டாலும்கூட, உள்ளூரில் பாதுகாப்புத் துறை-சட்டம் ஒழுங்கைப் பேணுகிற காவல்துறை (பொலிஸ்) மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டதன் அல்லது அவற்றின் மீதான அவர்களின் திருப்தியீனத்தின் பிரதிபலிப்புத்தான் இவ்வாறான சர்வதேசத் தலையீட்டுக்கான கோரிக்கைகள் எழுவதற்கான அடிப்படைக் காரணம் என்பதைக் காய்தல் உவத்தலின்றி நடுநிலையாகச் சிந்திக்கும் எவரும் ஒப்புக்கொள்வர். அரசாங்கத்தால் நியமிக்கப்படும் 'ஆணைக்குழுக்கள்' மற்றும் 'பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள்' போன்ற குழுக்களின் செயற்பாடுகளின் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட போக்குதான் இலங்கையில் இப்போது பரவலாகக் காணப்படுகிறது.

ஆனாலும், சர்வதேசத் தலையீடு, விசாரணைக் கோரிக்கைகள் எதுவும் கடந்த காலங்களில் தீர்வுகளைக் கொண்டுவந்ததில்லை. இனியும் கொண்டுவரப்போவதுமில்லை.

ஈழத்தமிழர் தரப்பைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகச் சர்வதேச அமைப்புகளை நாடுகின்ற போக்கு 1972 இல் குடியரசு அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து கால்கோள் கொள்கிறது. அதன் தோற்றுவாயாக முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் உருவாக்கத்திற்குக் காரணமாயிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தால் (தந்தை செல்வா) கையொப்பமிடப்பட்டு 'அனைத்துலக நீதிச் சபை' முன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட 1973 மே 15 திகதியிடப் பெற்ற முறையீடு அமைகிறது.

இந்த முறையீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இன்று அரை நூற்றாண்டு கடந்த நிலையில் சர்வதேசத் தலையீட்டுக் கோரிக்கை இதுவரை சாதித்தது என்ன என்ற கேள்விக்கு விடை பூச்சியமே. சர்வதேசத் தலையீடு என்பது நடைமுறையில் எவ்வளவு பலவீனமானது அல்லது சாத்தியமற்றது என்பதை இதனூடாகத் தெரிந்து கொள்ள முடியும். ஆனால், தமிழ் மக்களால் தேர்தல்களில் அங்கீகரிக்கப்பட்ட ஈழத்தமிழரின் அரசியல் தரப்பு இன்னும் சர்வதேசத்தையே நம்பிக் கொண்டிருக்கிறது. 'தமிழ்த் தேசிய' அரசியல்வாதிகளின் அண்மைக்கால அரைவேக்காட்டு அறிக்கைகள் அதைத்தான் காட்டுகின்றன. 'தமிழ்த் தேசிய' அரசியல்வாதிகள் சர்வதேசம் தலையிட வேண்டுமென்று ஆளுக்காள் போட்டி போட்டுக் கொண்டு அறிக்கை விடுகிறார்கள்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை-காணாமல் போனோர் விவகாரத்தில் சர்வதேசத் தலையீடு-இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து தமிழ் மக்களிடையேயான சர்வஜன வாக்கெடுப்பு என்றெல்லாம் இப்போது அடிக்கடி 'சர்வதேச' க் கதையளக்கும் 'தமிழ்த் தேசியக்' கட்சிகள் எதுவும் யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகள் வாயே திறக்கவில்லை. யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து 2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை (இவரே இறுதி யுத்தத்திற்கு இராணுவத் தலைமை ஏற்றிருந்தார்) ஆதரிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானமும் 2010 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலையொட்டித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் போர்க் குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணை பற்றிப் பிரஸ்தாபிக்கப்படாமையும் இன்று 'தமிழ்த் தேசிய' க் கட்சிகள் கோரி நிற்கின்ற சர்வதேசத் தலையீட்டுக் கோரிக்கைக்கு முரண்பாடானவையாகும். 2012 இல் அமெரிக்கா ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சீனா பக்கம் சாய்ந்து கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவை இறுக்கிப்பிடிப்பதற்காகப் போர்க் குற்றங்கள் குறித்து இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவந்த பின்னரே தமிழ்த் தேசியக் கட்சிகள் சர்வதேச விசாரணை குறித்து வாய் திறந்தன. இது எதனைக் காட்டுகிறதென்றால் 'தமிழ்த் தேசிய' க் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் அரசியல், வெறும் சந்தர்ப்பவாத அரசியலே தவிர அது மக்களுக்கான அரசியல் அல்ல என்பதைத்தான்.

இன்று 'முள்ளிவாய்க்கால்' போர்க்குற்றங்களுக்காகச் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் ஒரு கட்டத்தில் 'சர்வதேச விசாரணை முடிந்து விட்டது. நவநீதம்பிள்ளை (ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர்) யின் அறிக்கைதான் சர்வதேச விசாரணை' என்று இவ்விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்ததையும் அதற்குத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா ஒத்தூதியதையும் தங்கள் வசதிக்காக இப்போது இருவரும் மறந்து விட்டார்கள். சர்வதேசப் போர்க் குற்ற விசாரணை குறித்தோ -இனப் பிரச்சினைக்கான திருப்தியான அரசியல் தீர்வு குறித்தோ அர்ப்பணிப்புடன் கூடிய தெளிவான வழிவரைபடம் 'தமிழ்த் தேசிய' அரசியல்வாதிகள் எவரிடமும் இல்லையென்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்த ஒரு விடயமே போதும்.

காலத்துக்குக் காலம் 'தமிழ்த் தேசிய'க் கட்சிகள் ஒன்று கூடுவதும் பின் பிரிவதும்கூட தேர்தல் அரசியலே தவிர அது மக்களுக்கான அரசியல் அல்ல. 'தமிழ் தேசியக்' கட்சிகளின் சர்வதேச பல்லவியும் இது போன்றதோர் தேர்தல் அரசியல் தேவைப்பாடுதான். இக்கட்சிகள் எல்லாம் இதுவரை தமிழ் மக்களுக்கு எந்தவிதமான சமூக பொருளாதார அரசியல் நன்மைகளையும் பெற்றுக் கொடுக்க முடியாத தமது கையாலாகாத்தனத்தை மறைப்பதற்காகவே சர்வதேசப் பாட்டுப் பாடுகின்றன. தமிழ் மக்களை எந்த வழியாக எந்த ஊருக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்பதில் இத் 'தமிழ்த் தேசிய'க் கட்சிகளிடம் தெளிவில்லை. திட்டமும் இல்லை. இல்லாத-பெயர் தெரியாத ஊருக்குத்தான் இக்கட்சிகள் வழி கூறிக் கொண்டிருக்கின்றன. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சர்வதேச தலையீடு தீர்வைக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்பு 'கானல் நீர்'ஆகும். அது வெறும் மாயையே. இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் தலையிடக்கூடிய ஒரேயொரு நாடு இந்தியாவே.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு திருப்தியான தீர்வை ஏற்படுத்த இந்தியாவினால் மட்டுமே-இந்தியா மனம் வைத்தால் மட்டுமே முடியும் என்பதே யதார்த்தம். சர்வதேசமென்று விரல் நீட்டப்படுகின்ற மேற்குலக நாடுகள் எதுவும் இந்தியாவை மீறி அல்லது ஓரம் கட்டிவிட்டு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடப்போவதில்லை என்பதையே இன்றைய உலக அரசியல் ஒழுங்கு உணர்த்தி நிற்கிறது.

எனவே, எதிர்காலத்தில் ஈழத் தமிழர்கள் 'சர்வதேசம்' என்ற மாயமானுக்குப் பின்னே சென்று ஏமாற்றம் அடையாமல் 'இந்தியா' என்கின்ற யதார்த்தத்தைப் பற்றிப் பிடிக்கின்ற அறிவுபூர்வமானதோர் அரசியல் பொறிமுறையொன்றினை வியூகத்தினை வகுத்துக் கொள்வது அவசியம். இதனையும்தான் இப்பத்தி 'மாற்று அரசியல்' ஆக அடையாளப்படுத்துகிறது. ■

# பி.ஜே.பி கூட்டணியிலிருந்து வெளியேறியது அ.தி.மு.க



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தமிழக பாரதீய ஜனதாக் கட்சிக்கும் இடையே நிலவிய கூட்டணிக்குழப்பத்துக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து அரசியல்செய்யும் பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் விட்டு வைக்கவில்லை. ஜெயலலிதா, பேரறிஞர் அண்ணா ஆகியோரையும் அண்ணாமலை தரக்குறைவாகப் பேசினார். அண்ணாமலையின் போக்கை டெல்லித் தலைமை கண்டுகொள்ளவில்லை.

அண்ணாமலையின் பதவியைப் பறிக்கும் படை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விடுத்த வேண்டுகோள் அனைத்தும் குப்பைக் கூடைக்குள் போடப்பட்டன. தலைவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினர் தொண்டர்கள் குமுறினர். பாரதீய ஜனதாவுடன் கூட்டணி இல்லையென அதிகார பூர்வமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.

பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை, ஜெயலலிதா, அண்ணா போன்ற தலைவர்களை, கூட்டணி தர்மத்தை மீறி விமர்சித்து வருவதாகக் கூறி, பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என அ.தி.மு.க சார்பில் அறிவிக்கப்பட்டது. அண்ணா குறித்து தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை விமர்சித்த நிலையில், அதற்கு அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம், செல்லூர் ராஜா உள்ளிட்டோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொடர்ந்து, பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்று ஜெயக்குமார் கடந்த 18 ஆம் வாமையதி தெரிவித்தார்.

பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து அ.தி.மு.க விலகிக் கொள்கிறது என்று திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள், எம்.எல்.ஏக்கள் கூட்டம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்துக்குப் பின்னர், அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: “அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் பின்வருமாறு: தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள, பா.ஜ.கவின் மாநிலத் தலைமை, கடந்த ஒரு வருட காலமாகத் திட்டமிட்டே, வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு அ.தி.மு.க மீதும் எங்களுடைய கட்சியின் தெய்வங்களான பேரறிஞர் அண்ணா, மறைந்த முதல்வர் ஜெயலலிதா குறித்து அவதூறாகப் பேசியும் எங்கள் கொள்கைகளை விமர்சித்தும் வருகிறது.

மேலும், பா.ஜ.கவின் மாநிலத் தலைமை கடந்த 20.08.2023 அன்று மதுரையில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க அ.தி.மு.க வீரவரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாட்டை சிறுமைப்படுத்தியும் இரண்டு கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களை வழிநடத்தும் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பற்றி அவதூறாக விமர்சித்தும் வருகிறது. இந்தச் செயல் கட்சித் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மத்தியில் கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தலைமைக் கழகத்தின் எம்.ஜி.ஆர் மாளிகையில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற தலைமைக்கழகச் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், இரண்டு கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களின் எண்ணத்துக்கும், விருப்பத்துக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, அ.தி.மு.க இன்று முதல் பா.ஜ.கவிலிருந்தும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்தும் விலகிக்கொள்கிறது என்ற ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வருகின்ற 2024 இல், நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க தலைமையில், கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில், மற்ற கட்சிகளின் கூட்டணியுடன் தேர்தலை சந்திக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர் கூறினார்.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலான உறுப்பினர்கள், பா.ஜ.க கூட்டணியில் இருந்து விலக வலியுறுத்தினர். கே.பி.முனுசாமி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தபோது, கட்சி அலுவலகத்தில் திரண்டிருந்த அ.தி.மு.க தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தமிழகத்தில் 2019 பொதுத் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல் ஆகியவற்றை அ.தி.மு.கவுடன் பா.ஜ.க கூட்டணி அமைத்து சந்தித்தது. 2024 மக்களவைத் தேர்தலிலும் கூட்டணி தொடரும் என்று இரு கட்சிகளும் அறிவித்திருந்தன.

பொதுத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், நாடு முழுவதும் அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றன. தேசிய அளவில் காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணி அவ்வப்போது கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டங்களை நடத்தி, முக்கிய முடிவுகளை எடுத்து வருகின்றன. அதை எதிர்கொள்ள பா.ஜ.கவும் தனது கூட்டணிக் கட்சி நிர்வாகிகளை அவ்வப்போது அழைத்துப் பேசி வருகிறது. அவ்வாறு கடந்த 14 ஆம் திகதி அ.தி.மு.க பொதுச் செயலாளர் பழனிச்சாமியை, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அழைத்து பேசியுள்ளார்.

பா.ஜ.க தேசிய தலைமையின் அழைப்பை ஏற்று, அ.தி.மு.க பொதுச் செயலாளர் பழனிச்சாமி கடந்த 14 ஆம் திகதி டெல்லி சென்றார். அங்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, சுமார் 20 தொகுதிகளில் பா.ஜ.க மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகள் போட்டியிட விருப்பம் தெரிவித்ததாகவும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்ச் செல்வம், அ.ம.மு.க பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் ஆகியோரை கூட்டணியில் சேர்த்துக்கொள்ள விரும்புவதாகவும் அமித் ஷா கூறியதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த நிபந்தனைகளை பழனிச்சாமி ஏற்கவில்லை என்று தெரிகிறது.

அ.தி.மு.க மூத்த நிர்வாகிகள் டெல்லி சென்று பா.ஜ.க தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவை சந்தித்து பேசியது, அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது. அ.தி.மு.க எம்.பி, எம்.எல்.ஏக்கள் கடந்த 22 ஆம் திகதி டெல்லி சென்று, பா.ஜ.க தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவை சந்தித்து, அண்ணாமலையின் பதவியை பறிக்க வலியுறுத்தியதாகவும் அதை அவர் ஏற்க மறுத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த பரபரப்பான சூழலில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில், பொதுச் செயலாளர் பழனிச்சாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள், தலைமைக் கழக செயலாளர்கள், எம்.பி, எம்.எல்.ஏக்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து அ.தி.மு.க விலகிக் கொள்வதாக அறிவிக்கப்பட்டது.

பாரதீய ஜனதாக் கட்சிமௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. என்னதான் பிரச்சினை என்றாலும் எடப்பாடி கூட்டணியில் இருப்பார் என்றே மோடியும் அமித் ஷாவும் நம்பிக்கை வைத்திருந்தனர். பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைத்தால் தமிழகத்தில்

(13 ஆம் பக்கம் பார்க்க...)

# ரணிலின் அமெரிக்கப் பயணத்தின் பிரதிபலன்களும் அனுகூலங்களும்

எம்.ஏ.எம்.நிலாம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.நா பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக கடல்சார் நாடுகளுக்கான மூன்றாவது இந்து-பசுபிக் நாடுகளின் கலந்துரையாடலின் போது முன்னிலைப்படுத்திய புதியதொரு சொல்லாடல் உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உலகின் எந்த நாடும் குறிப்பாக, கடல்சார் நாடுகள் தமது புவிசார் அரசியல் என்ன? என்பதைப் புரிந்துகொள்ளத் தவறியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். தத்தமது நாடுகளில் நாம் என்ன செய்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளாத நிலையில் ஏனைய நாடுகள் விடயத்தில் மூக்கை நுழைத்து முரண்பாடுகளை உருவாக்கிக் கொண்டு எதிரும் புதிருமாகப் பேசிக் கொண்டிருப்பதையே வெளிப்படையாகக் காணமுடிவதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருப்பது சர்வதேசத்தைச் சிந்திக்க வைத்திருப்பதாகவே பார்க்க முடிகிறது.

முக்கியமாகச் சொல்வதானால் இலங்கை அண்மைக் காலமாக பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கிப் போயிருந்து இப்போதுதான் சிறிதுசிறிதாக அதிலிருந்து மீண்டு வந்துகொண்டிருக்கின்றது. இந்தச் சிறிய தீவு எதிர்கொண்ட சவால்கள் எண்ணிலடங்காதவையாகும். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் இதிலிருந்து மீள்வதற்கு பல்வேறுபட்ட பிரயத்தனங்களை எடுத்த போதிலும் அந்த முயற்சிகள் சரியான திசையில் பயணிக்க முடியாத நிலையே தொடர்ந்தன. இதில் முக்கியமான விடயம் யாதெனில், நாம் யாருமே கண்டுகொள்ளாத ஐந்தாண்டுத் திட்டமாகும். ஆட்சி பீடமேறும் ஒவ்வொரு அரசும் ஐந்தாண்டுத் திட்டத்தை மட்டுமே வகுத்துச் செயற்பட முனைகின்றது. அந்த எல்லைக்குள் நின்றுகொண்டு இயங்குவதால் அதற்கப்பால் எதிர்காலம் குறித்து சிந்திக்கத் தவறுகின்றது. அன்றைய எந்தவொரு அரசிடமும் தொலைநோக்குப் பார்வை காணப்படவில்லை என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

முதலாளித்துவ தரப்பு ஆட்சிக்கு வரும் போது மேற்குலக நாடுகளின் முக்கியமாக அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டிஷ் ஆகிய ஆதிக்கத்தின் சார்புநிலை சார்ந்ததாகவே பயணித்தது. சோஷலிச போக்குடைய அல்லது கம்யூனிஷ சிந்தனைகொண்ட இடதுசாரித் தரப்புக்கள் சீனா, ரஷ்யா உட்பட ஆபிரிக்க, மத்திய கிழக்கு ஆதிக்கங்களின் சார்பு நிலையைப் பின்பற்றி பயணித்தது. அவற்றின் பின்புலத்தில் நாடு இருவேறு தளங்களில் பயணித்ததையே அவதானிக்க முடிந்தது. முதல் தரப்பு காலத்தில் வெளிநாட்டுக் கடன் மூலம் நாடு வளமடைவதான ஒரு மாயை காண்பிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் மக்களது கைகளில் பணப் புழக்கம் அதிகமாகக் காணப்பட்டது. இதன் காரணமாக எம்மை அறியாமலேயே எமது நாடு உலகுக்கு கடனாளியாக மாறியது. இன்றளவும்கூட நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் உலகுக்கு கடனாளிகளாகக் காணப்படுகின்றனர். கசப்பாக இருப்பினும் இதனை நாம் ஏற்றேயாக வேண்டும்.

அதேசமயம் இடதுசாரிச் சிந்தனைப் போக்கு அல்லது சோஷலிச சிந்தனையைப் பின்பற்றி தரப்பு ஆட்சிக்கு வருகின்ற போது தேசியவாதம் என்ற நிலையைக் கடைப்பிடித்தால் உள்ளூர் உற்பத்தியை மட்டுமே நம்பி வாழும் நிலை உருவானது. இதனால் அந்தத் தரப்பு ஆட்சியின் போது நாடு வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ளும் நிலை தோன்றியது. இந்த ஆட்சியின் போது தனியார் வசமிருந்த வர்த்தகத் துறை பெருமளவில் தேசிய மயமாக்கப்பட்டது. போக்குவரத்து, கூட்டுறவு வர்த்தகம், துறைமுகம் என்பன இதிலடங்கும். இத்தேசியமயமாக்கலால் பல நிறுவனங்களும் பின்னடைவையே எதிர்கொண்டன. சுரண்டல், ஊழல், மோசடி என்பன இதனால் ஏற்பட்ட விளைவுகளேயாகும். தொழிலாளர் வர்க்கம்கூட முதலாளித்துவத்துக்கு எதிராக குரல் கொடுத்தால் அந்தச் சமூகம் காலங்காலமாக வறுமைக்குள்ளேயே தள்ளப்பட்டது.

ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை தேர்தல்வரும் போது மாறி மாறி 'லிபரல்' என்ற தாராள வாதமும் சோஷலிசம் என்ற கம்யூனிஷம் அல்லது தேசியவாதமும் கோலோச்சத் தொடங்கியதால் நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக பின்னடைவை நோக்கியே பயணிக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் தொடர்ச்சியாக வெளிநாட்டிடம் கையேந்தும் மோசமான நிலை உருவானது. இதனால் நாடு வறுமைக் கோட்டுக்குள் தள்ளப்பட்டது. சுதந்திரத்திற்கு முன்னர் அரசியலில் தன்னிறைவு கண்ட நாடு, பொருளாதாரத்தில் மேம்பட்டிருந்த நாடு படிப்படியாக அரசு கூட வெளிநாட்டை நம்ப வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. உழைக்கும் வர்க்கம்கூட சோம்பேறியாக்கப்பட்டனர். விவசாயம் மோசமாகப் பாதிக்கப்பட்டது. தேசிய உற்பத்தி கூட பூச்சிய நிலைக்குள்ளானது.

இவ்வாறான நிலையிலேயே 1977 இல் ஆட்சிபீடமேறிய ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையிலான தாராளவாதக் கட்சி திறந்த பொருளாதாரத்துக்கான கதவுகளைத் திறந்துவிட்டது. இதன் பிரதிபலனாக மக்கள் வெளிநாட்டு மோகத்துக்குள் உள்வாங்கப்பட்டனர். உள்நாட்டு உற்பத்தியை புறம் ஒதுக்கி வெளிநாட்டு உற்பத்திகள் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினர். வியர்வை சிந்தாமல் வாழும் ஒரு மோசமான கலாசாரம் தோற்றுவிக்கப்பட்டது. இடதுசாரித் தரப்புக்கள் இதற்கெதிராகக் குரலெழுப்பிய போதும் அதிகமான மக்கள் சமூகத்தின் முன்பு அவை செல்லாக்காசாகி விட்டன. நீலம், சிவப்பு வந்தால் பட்டினி, பச்சை வந்தால் பசி தீரும் என்ற மாய நிலை உருவானது. இதற்கிடையில் ஜே.வி.பி போன்ற தரப்பினரால் புரட்சி தொடங்கப்பட்டதால் இடதுசாரித் தரப்பு மீது வெறுப்படையத் தொடங்கினர்.

காலம் மாறி நாடு கடைநிலைக்கு வந்துவிட்டதால் சோக நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்தப் பேரழிவிலிருந்து தேசத்தைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த ஜனாதிபதி ரணில் வெதும்பும் தீயில் கால்பதித்தார், சவால்களைத் தலையில் சுமந்து கொண்டார். "எந்தவொரு நாட்டுக்கும் அடிமைப்பட மாட்டோம், மண்ணை விலை பேசவும் மாட்டேன்" என உறுதி பூண்டார். இந்தியாவோ, சீனாவோ, அமெரிக்காவோ யாராக இருந்தாலும் எவருக்கும் உளவு பார்க்கும் வேலைகளுக்கு இலங்கை மண்ணில் இடமளிக்கப் போவதில்லை என நெஞ்சுயர்த்தி சொல்லி விட்டார். எமது புவிசார் அரசியலுக்குள் தலையிட எவருக்கும் அனுமதியில்லை. இந்து சமுத்திரத்தில் இலங்கை மூலோபாய அமைவிடத்தைக் கொண்டிருக்கின்றது. அதனைப் பாதுகாத்துக் கொள்வதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்பதை அவர் வலியுறுத்தி உள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் எந்தவொரு நாட்டினதும் உளவுக் கப்பல் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறியுள்ள ஜனாதிபதி வர்த்தக நோக்கிலான ஆராய்ச்சிக் கப்பல்கள் வருவதில் தடையில்லை. சர்வதேச மட்டத்தில் பரப்பப்படும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை முற்றாக நிராகரித்ததோடு உள்நாட்டில் சுயநல அரசியலுக்காக குற்றம் சுமத்துவதை எந்த விதத்திலும் அனுமதிக்கப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒத்துழைப்புக்களை எந்த நாட்டுடனும் செய்துகொள்ள பின்நிற்கப் போவதில்லை எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். (13 ஆம் பக்கம் பார்க்க...)

42 முதல் சந்திப்பு

# சாகித்திய ரத்னா விருது பெற்றிருக்கும் இலக்கியப் படைப்பாளி க.சட்டநாதன்

முருகபூபதி

கொழும்பு கொட்டாஞ்சேனையில் ஜெம்பட்டா வீதிக்கு அருகில் சப்பாத்து வீதி என்ற தெரு இருக்கிறது. இதனை ஆங்கிலத்தில் Shoe Road என அழைப்பார் கள். இந்த வீதியில் 35 ஆம் இலக்க இல்லத்திலி ருந்து 1972 ஆம் ஆண்டு முதல் பூரணி என்ற கலை, இலக்கிய, அறிவியல் காலாண்டிதழ் வெளிவந்தி ருக்கும் தகவலை இன்றைய தலைமுறை எழுத்தா ளர்களும் இலக்கியவாதிகளும் வாசகர்களும் அறிவார்களா?

பூரணி இதழின் இணை ஆசிரியர்கள் என்.கே. மகாலிங்கம், க.சட்டநாதன். பூரணியினர் என்ற அடைமொழியுடன் இவ்விதழின் ஆசிரியர் குழு விலிருந்தவர்கள்: மு.நேமிநாதன், த.தங்கவேல், இமையவன், இரா.சிவச்சந்திரன் ஆகியோர்.

இவர்களில் என்.கே.மகாலிங்கமும், இரா. சிவச்சந்திரனும் மு.நேமிநாதனும் கனடா, இங் கிலாந்து என புலம்பெயர்ந்து சென்று விட் டனர்.

இவர்கள் அனைவரும் இணைந்து வெளி யிட்ட பூரணி இதழும் அற்பாயுளில் மறைந்து விட்டது.

ஆனால், அதில் எழுதியவர்கள் தொடர்ந்தும் எழுதிக்கொண்டிருந்தார்கள். பூரணி இதழ் வெளி யான இல்லத்தை பின்னாளில் தொழிற்சங்கவாதி எம்.எஸ்.செல்லச்சாமி விலை கொடுத்து வாங்கி விட்டார்.

அந்த வீட்டுக்காரர் என்.கே.மகாலிங்கம் நாட்டைவிட்டுச்செல்லும் வரையில், அந்த இல் லம் எழுத்தாளர்கள் அடிக்கடி வந்துசெல்லும் இலக்கிய சத்திரமாகவே விளங்கியது.

இந்த இல்லத்தில் 1972 ஆம் ஆண்டு இறுதி யில் நான் முதன் முதலில் சந்தித்த இலக்கியப் படைப்பாளி க.சட்டநாதனுக்கு இந்த ஆண்டு இலங்கையில் சாகித்திய ரத்னா விருது கிடைத் திருக்கிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு அறி முகமான சட்டநாதன், இற்றைவரையில் எனது அன்பிற்கும் அபிமானத்துக்குமுரியவராக விளங் குவதற்கு, அவரிடம் குடியிருக்கும் நல்லியல்புகள் தான் முக்கிய காரணம்.

1972 இல் சட்டநாதனை எனக்கு அறிமுகப்ப டுத்திய நண்பர் பூரணி மகாலிங்கத்தை இந்த ஆண்டு ஜூன் மாதம் கனடாவில் சந்தித்த வேளையில், அன்றைய பசுமையான இலக்கிய நினைவுகளைப் பகிர்ந்துகொண்டபோது, சட்ட நாதனுடைய பெயரும் வந்தது.

1972 டிசம்பரில் வெளியான பூரணி இதழில் சட்டநாதனின் 'குருவியும் அந்தக் கிராமத்து சிறு மியும்' என்ற சிறுகதை வெளியாகியிருந்தது. இவ் விதழில் இடம்பெற்ற மேலும் மூன்று சிறுகதை களை யோ.பெனடிக்ற் பாலன், கிருஷன் சந்தர் ஆகியோருடன் நானும் (அந்தப்பிறவிகள்) எழுதி யிருந்தேன்.

"பங்குனியின் கடைக்கூறு, வெய்யில் மணலை வறுத்தெடுத்துக்கொண்டிருந்தது. அந்த வெய்யி லையும் பொருட்படுத்தாமல், அவள்அந்தச் சிறுமி, சொர்ணம் மகள் பெரியபுலம் வெளிமுழு வதும் பம்பரமாய் சுழன்று வந்தாள். அவளது தலையில் ஒரு பெரிய நார்க்கடகம். கடகம் நிறைந்துவரும் எரு. அவள் இப்போது செல்ல முத்தாச்சிக்கு எருப்பொறுக்கிறாள்." என்ற வரிகளுடன் தொடங்கும் 'அந்தக் கிராமத்துச் சிறுமியும் ஒரு சிட்டுக் குருவியும்' என்ற சிறுகதையை சட்டநாதன் எழுதியிருந்தார்.




பூரணியில் நான் முதலில் படித்த சட்டநாதனின் அச் சிறுகதை, 'அந்தக் கிராமத் துச்சிறுமி' என்ற பெயரில் 1980 இல் வெளியான சட்ட நாதனின் முதல் கதைத்தொகுப் பான 'மாற்றம்' நூலில் இடம்பெற் றுள்ளது.

சட்டநாதன் தொடர்ச்சியாக சிறுகதைக ளையே எழுதிவந்தவர். பின்னாளில் ஜீவநதியில் 'உயிரில் கலந்த வாசம்' என்ற தொடர்கதையும் எழுதினார்.

அவ்வப்போது சில இலக்கியக்கட்டுரைகள் எழுதியிருந்தாலும், அவர் ஒரு முழுமை யான சிறுகதைப்படைப்பாளிதான். இவ் வாறு இருப்பதும் தனித்துவமானது, சிறப்பா னது. ஏனைய இலக்கியத்துறைகளில் கவனத் தைச் செலுத்தி, முதலில் தொடங்கிய சிறுகதை இலக்கிய வடிவத்திலிருந்து படிப்படியாக அகன்று, தங்கள் கவனத்தை சிதறச்செய்த பல எழுத்தாளர்களை அறிவேன். அதில் நானும் ஒரு வன் 1972 இல் இலக்கிய நண்பர்களாக இணைந் திருந்த நாம் எதிர்பாராதவகையில், 1980 களில் வீரகேசரியில் இணைந்தும் பணியாற்றியிருக்கின் றோம்.

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரான சட்ட நாதன், இலங்கை ஆசிரியர் சங்கத்திலும் அங்கம் வகித்தவர். மூவினத்தவர்களுக்குமான இந்த ஆசி ரியர் தொழிற்சங்கம், 1976 இல் அரசியல் கைதி களை விடுதலை செய்யவேண்டும் என்ற அறப் போராட்டத்தை நாடுதழுவிய ரீதியில் நடத்தி யது. சில கோரிக்கைகளை முன்வைத்து பெரும் வேலை நிறுத்தப்போராட்டம் நடத்தியபோது நண்பர் சட்டநாதனும் அதில் ஈடுபட்டு, அன்றைய அரசின் சட்டங்களினால் தனது வேலையை இழந்திருந்தார்.




அச்சந்தர்ப்பத்தில் வீரகேசரி விளம்பரப் பிரி வில் அவர் இணைந்தார். நானும் அதே காலப்ப குதியில் வீரகேசரியில் உள்ளக இடமாற்றத்தி னால் அந்தப்பிரிவிற்கு செல்லநேர்ந்தது.

சகலருடனும் இன்முகத்துடன் உறவாடும் இயல் புள்ள சட்டநாதனுக்கு அதிர்ந்து பேசத் தெரியாது.

சக ஆண் ஊழியர்களை "அப்பு... அப்பு..." என அழைப்பார். அங்கு தமிழ், முஸ்லிம், சிங்கள ஊழியர்களும் பணியாற்றியமையால் அனைவருடனும் சகோதர வாஞ் சையுடன் பழகுவார்.

படைப்பிலக்கியவாதி களுக்கு கிடைக்கும் சமூக அங்கீகாரம் முதலில் யாரோ ஒருவரிடமிருந்துதான் மேற்கி ளம்பும். பின்னர் அதனையடி யொற்றி மற்றவர்களும் பேசவும் எழுதவும் தொடங்குவர். முதலில் அந்த அங்கீகார வார்த்தைகளை முன் மொழிபவர்களை வசிட்டர் என்பார்கள். அதனால் தான் அத்தகையோரின் அங்கீகாரத்தை "வசிட்டர் வாயால் மகரிஷிப்பட்டம்" என்பார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு இலக் கிய வசிட்டர் இருந்தார். அவர் இன்றும் வசிட் டர்தான்! எளி தில் எவரையும் அங்கீக ரித்துவிடமாட்டார். அவரும் நான் வதியும் மெல்பன் நகரில்தான் இருக்கி றார். அவர்தான் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி காசிநாதர். இவர், என்.கே.மகாலிங்கம், மு.பொன்னம்பலம், மு.நித்தியானந்தன், ஆழியாள் உட்பட பல இலக்கிய வாதிகளின் ஆசிரியர். வீரகேசரி ஆசிரிய பீடத்தில் செ.கதிர்காமநாதன், ஸ்ரெனிஸ்லஸ் என்ற அன்டன் பாலசிங்கம் ஆகியோருடன் பணியாற்றியவர்.

பல வருடங்களுக்கு முன்னரே சட்டநாதனின் சில சிறுகதைகளைப் படித்துவிட்டு, "சட்டநா தன் சிறந்த சிறுகதை ஆசிரியர், இவர் எதிர்காலத் தில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் சிறுகதைத் துறையில் பிரகாசிப்பார். இருந்து பாருங்கள்" என்று அன்றே தீர்க்கதரிசனமாகச் சொன்னார். இவ்வாறு இந்த வசிட்டர் சொன்ன வாசகங்களுடன் சட்டநா தனை 1991 மார்ச் மல்லிகை இதழில் அறிமுகப்படுத்தி எழுதியிருந்தார் இரா. சிவச்சந்திரன். அந்த இதழில் சட்டநா தன்தான் அட்டைப்பட அதிதி.

சட்டநாதன், இதுவரையில் எழுதியி ருக்கும் அனைத்துக்கதைகளிலும் மனித நேயம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. பெண்களின் விட்டு விடுதலையாகும் இயல்பு சித்திரிப்பாகின்றது. இவரு டைய படைப்புமொழி எந்தச்சிக்கல் களும் அற்ற எளிமையானது. அதனால் எத்தகைய வாசகர்களுக்கும் இலகுவில் நெருக்க மாகிவிடும். இலக்கியவட்டாரத்தில் சிறு கதை இலக்கியம் பற்றிய பேச்சு வந்தால், அங்கு சட்டநாதனின் பெயர் தவிர்க்க முடியாததாயி ருக்கும்.

தமிழ் கதைஞர் வட்டத்தின் பரிசில்களை சட்ட நாதனின் பல கதைகள் பெற்றுள்ளன. சட்டநாத னின் இரண்டாவது சிறுகதைத்தொகுப்பு 'உலா', யாழ்.இலக்கியவட்டம், அகில இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பு ஆகியனவற்றின் விருதுகளை யும் வட-கிழக்கு மாகாண சாகித்திய விருது, இலங்கை தேசிய சாகித்திய விருது முதலானவற் றையும் பெற்றுள்ளது. இம்முறை சாகித்திய ரத்னா விருது பெறும் எங்கள் சட்டநாதனுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். ■

# தம்பாட்டி பிரதேசத்தின்

# பண்டார வன்னியன் நாடகக்கூத்து

ரதிகலா உதயகுமார்
ஊடக கற்கைகள் துறை
இரண்டாம் வருடம்

நாட்டாரியல் என்பது நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், விழுமியங்கள், நம்பிக்கைகள், இலக்கியங்கள், கதைகள், பாடல்கள், பழமொழிகள், சடங்குகள் போன்றவற்றை சேகரித்து வகைப்படுத்தி தொகுத்து ஆராய்ந்து அவற்றை ஆவணப்படுத்தும் துறையாகும். மேலும் விரிவாகக் கூறுவதென்றால் மரபுகள் நம்பிக்கைகளைத் தாண்டி வாழும் கிராமத்து மக்களது விளிம்புநிலை வாழ்வியலை அச்சொட்டாக எடுத்துக்காட்டுவதே நாட்டாரியல். நாட்டாரியல் மூலமாகத்தான் ஒவ்வொரு மனிதனும் தமது பரம்பரை அல்லது தமது மூதாதையர் கடந்து வந்த வரலாற்றை அறிய வேண்டியுள்ளது. எமது உரிமைகள், எமது இருப்பு, எமது பண்டைய வரலாறுகள் பல அரசியல் பின்புலங்களினால் இன்று கேள்விக்குறியாகியுள்ள நிலையில் நாம் காலங்காலமாகப் பின்பற்றி வரும் எமது மரபுசார் அடையாளங்கள் மூலமாகத்தான் அவற்றை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இன்று பலகோடி வசூலை சம்பாதிக்கும் சினிமாப் பாடல்கள்கூட நாட்டார் பாடல்களை ஊடறுத்து சென்றவைதான்.

இலங்கையை ஆண்ட இறுதி தமிழ் மன்னன் பண்டார வன்னியன் என்று வரலாறு கூறுகின்றது. எனினும் பண்டார வன்னிய மன்னன் தமிழரா? சிங்களவரா? என்ற கேள்விகளும் ஒரு சாரரால் முன்வைக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்துறை பிரதேசத்தில் ‘தம்பாட்டி’ எனும் இடத்தில் காந்திஜி நாடகமன்றக் குழுவினரால் காலங்காலமாக பண்டார வன்னியன் கூத்து மேடை ஏற்றப்பட்டு வருகின்றது. எனவே, இவ்வாறான சில ஆதாரங்கள் மூலமாகத்தான் எமது வரலாற்றிற்கான ஆவணங்களைச் சேமித்து வைக்க வேண்டியுள்ளது.

பாயும் புலி பண்டார வன்னியன் என்பவன் வன்னி நிலப்பரப்பிலே வெள்ளையர்களுக்கு எதிராக நின்று தமிழ் மண்ணை ஆண்ட இறுதி மன்னன். பண்டார வன்னியன் ஒரு சிற்றரசன். இவரது முழுப்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன். பண்டார வன்னியன் முல்லைத்தீவிலிருந்து வற்றாப்பளை அம்மன் கோயில் வரையுள்ள 2000 சதுர மைல் நிலப்பரப்பை ஆட்சி செய்த தமிழ் மன்னன், அமைச்சர்களாகத் தனது தம்பி கைலாய வன்னியனையும் தளபதியாக கடைசி சகோதரன் பெரிய மைனரையும் கொண்ட குழுவையும் அமைத்து அரசமைப்பை பேணி வந்தான். அவனுக்கு ஒரேயொரு சகோதரி. அவரது பெயர் நல்ல நாச்சாள். நல்ல நாச்சாள் பார்ப்பதற்கு மிக அழகான பெண்ணாக காணப்பட்டார். அவள் கலைகள் கற்பிக்கும் அவை புலவன் மீது காதல் கொண்டாள். இதே நேரத்தில் வன்னி நிலத்தை ஆண்டு வந்த குறுநில மன்னனான காக்கை வன்னியன் நல்ல நாச்சியாரை மணம் புரிய ஆசைப்பட்டான். அதற்காக பல முறை பண்டார வன்னியனிடம் ஓலை அனுப்பிய போதும் அவன் அதற்கு சம்மதிக்கவில்லை.

ஒருமுறை நந்தவனத்தில் நல்ல நாச்சாள் புலவரிடம் காதல் கொண்டிருக்க கண்ட காக்கை வன்னியன் புலவரிடம் சண்டைக்குப் போக புலவர் வாள் சண்டையிட்டு நையபுடைத்து அனுப்பி விட்டார். இந்தச் சம்பவத்தால் புலவன் அரச பரம்பரையில் இருந்து வந்தவன் என்பதை அறிந்து அவர்களின் காதலுக்கு பண்டார வன்னியன் சம்மதம் தெரிவிக்கின்றான். வன்னியில் பண்டார வன்னியன் திறை செலுத்த மறுத்த காரணத்தினால் வெள்ளையர்கள் படையெடுத்து வந்து வெற்றி காண முடியாமல் புறமுதுகுகாட்டி பின்வாங்கினர். தனிப்பட்ட ரீதியாகவே பண்டார வன்னியனோடு பகை கொண்ட காக்க வன்னியன் வெள்ளையர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்கின்றான். பலமுறை பண்டார வன்னியனோடு போரிட சென்று வெள்ளையர்கள் தோல்வியையே சந்தித்தார்கள். இவ்வாறான சமயத்தில் பண்டாரவன்னியனை தந்திரத்தால் மட்டுமே வெல்ல முடியும் என காக்கை வன்னியன் வெள்ளையர்களுக்கு ஆலோசனை கூறுகின்றான்.

அந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாக, தான் திருந்தி விட்டதாக பொய் கூறி பண்டார வன்னியனோடு சேர்ந்து கொள்கின்றான். தம்பிமார்களான மந்திரியும் தளபதியும் காக்கை வன்னியனை தம்மோடு சேர்க்க வேண்டாம் என்று கூறியும் “மறப்போம் மன்னிப்போம்” என்ற உயர் கொள்கை கொண்ட பண்டார வன்னியன் காக்கை வன்னியனை இணைத்துக் கொள்கின்றான். பின்னர் வெள்ளையர்களோடு இணைந்து சதித்திட்டம் தீட்டி மன்னனைத் தனியாக கூட்டிச் சென்று கண்டியில் ஒரு இடத்தில் வைத்து கொலை செய்கின்றான். இதுதான் பண்டார வன்னியன் நாடகத்தின் கதைச் சுருக்கமாகக் கூறப்படுகின்றது.

இப்பண்டார வன்னியன் கூத்தானது ஆரம்ப காலங்களில் கூத்தாக நிகழ்த்தப்பட்டாலும் தற்போதைய காலங்களில் இவை ஒரு மேடை நாடகமாகத்தான் ஆடப்படுகிறது. பண்டார வன்னியன் நாடகத்தில் வசனம், கதை, பாடல் என மூன்றுமே இணைந்து வரும். இவை எல்லாமே ஆரம்ப காலத்தில் இருந்தே மூதாதையர்களிடமிருந்து



வாய்மொழி மரபாகத்தான் பேணப்பட்டு வருகின்றது. இந்த நாடகத்தை ஆரம்பித்தவர் இவர்தான் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. இது மரபு வழியாக பேணப்பட்டு வரும் ஒரு நாட்டார் ஊடகமாகும். நாடகமானது தென்மோடி- வடமோடி என்ற பிரிவுக்குள் அடங்காமல் பிரத்தியேகமாக முல்லை மோடி என்ற தனிப்பாணியில் அமையப் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

தொலைக்காட்சி, தொலைபேசி, இணைய வசதிகள் எதுவுமே இல்லாத காலப்பகுதியில் மக்களை இணைக்கும் ஒரு கருவியாக கூத்துக்களே காணப்பட்டன என்றால் அது மிகையில்லை. அவ்வாறான காலகட்டத்தில் ஒவ்வொரு காட்சிகளுக்கும் திரை திறக்கப்பட்டு மூடப்பட்டு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் மக்களை கவர்ந்து கொள்வதற்காக திரைகள் மூடப்படுவதில்லை மேலும் நேரத்துக்கு ஏற்பவும் காலத்திற்கேற்பவும் நாடகம் சுருங்கி விரிவடையக் கூடியதாக அரங்கேற்றபடுகின்றது. தம்பாட்டி எனும் இந்தப் பிரதேசத்தை பொருத்த வரையில் தாம் மூதாதையர்களிடம் இருந்து கற்றுக் கொண்ட இந்தக் கலைகள் அழிந்து விடக்கூடாது எனும் நல்லெண்ணத்தில் தாமாகவே முன்வந்து அடுத்த தலைமுறைக்கு இதனை பயிற்றுவிக்கின்றார்கள். இவர்கள் இந்தக் கூத்தை தமது பிரதேசத்திற்குள் மட்டும் நிகழ்த்தாமல் பல வெளி மாவட்டங்களுக்கும் சென்று நிகழ்த்தியுள்ளார்கள். இந்நாடகக் கலைஞர்கள் கலாபூஷணம், கலை குறிசில், யாழ்.முத்து போன்ற கலைஞர்களுக்கான உயரிய விருதுகளையும் பெற்றுள்ளார்கள்.

நாட்டார் கலைகள் என்னதான் சமூகத்தில் பெறுமானம் மிக்க ஊடகமாகக் காணப்பட்டாலும்கூட அவற்றுக்கும் இருள் நிறைந்த பக்கங்களுண்டு. சமூகத்தில் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பையும் வரவேற்பையும் பெரும் கலைகளாக கூத்து வடிவங்கள் காணப்படுகின்றன. நாட்டார் கலைஞர்களும் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில்தான் இந்தக் கூத்துக்களை அரங்கேற்றி வருகின்றார்கள். பண்டார வன்னியன் கூத்தும் அன்றிலிருந்து இன்றுவரை பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில்தான் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

தமது மூத்த கலைஞர்கள் விட்டு சென்ற பாரம்பரிய சொத்தை தங்களோடு அழிந்து போய் விடக்கூடாது என்பதற்காக அடுத்த தலைமு றைக்கும் பயிற்றுவிக்கும் உயரிய நோக்கில் இக்கூத்து கலைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, கூத்துக்களை வளர்க்கவும் அவற்றை பாதுகாக்கவும் இன்றைய இளைய சமுதாயம் முன்வர வேண்டும். எமது பாரம்பரிய அடையாள சின்னங்களை நாம்தான் பாதுகாப்பான முறையில் ஆவணப்படுத்தி வைக்கவேண்டும். எனவே இது போன்ற கூத்துக்களையும் நாடகங்களையும் இனிமேலாவது இளைய சமுதாயத்தினர் கையிலெடுத்து அவற்றை அழிய விடாமல் பேணி காப்போம். ■

**திருக்குறளின் காமத்துப்பால் காட்டும், காதல் இலக்கியக் காட்சிகளின் இனிமையைப் பகிர்ந்து கொள்ளும் கட்டுரைத்தொடர்.**

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

# குறள் இன்பம்

46



**குறிப்பறிவுறுத்தல்**

ஒருவரை ஒருவர் காதலிக்க ஆரம்பித்தவர்கள், தங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களைத் தொடக்கத்திலேயே, வெளிப்படையாக ஒருவருக்கு மற்றவர் கூறிக்கொள்வதில்லை. அதிலும் பெண்கள் மிகவும் தயக்கம் காட்டுவார்கள், வெட்கப்படுவார்கள். ஆனால், அவர்களின் கண்கள் காட்டிக் கொடுத்துவிடும். முகம் வெளிப்படுத்திவிடும். செயல்கள் உணர்த்திவிடும். இவற்றைப் பற்றித்தான் "குறிப்பு அறிவுறுத்தல்" என்ற அதிகாரம் சொல்கிறது. குறிப்பு அறிவுறுத்தல் என்றால், காதலர்கள் தம் உள்ளக்கிடைக்கைகளை, தங்களுக்குள் குறிப்பால் உணர்த்திப்பரிமாறிக்கொள்ளுதல் ஆகும்.

**கண்கள் சொல்லும் செய்தி என்ன?**

அவனும் அவளும் அவளின் தோழியுமாக, மூவரும் சந்தித்துக்கொள்கிறார்கள். அவனும் தோழியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவளோ வாய் திறந்து எதுவுமே பேசாமல், நாணத்தின் வசப்பட்டு நிற்கிறாள். ஆசை அவளைப் பேசச் சொல்கிறது. வெட்கம் பேசவிடாமல் கொல்கிறது. உதடுகள் துறப்போமா? மூடி இருப்போமா? என்று துடிக்கின்றன. முகத்தில் ஒருவகை மலர்ச்சி பிறக்கிறது. கண்களில் மனதைத் திறந்து சொல்லத் தயங்கும் மருட்சி தெரிகிறது. அது அவனுக்குப் புரிகிறது. அவன் அவளைப் பார்த்துச் சொல்கிறான்.

"அன்பே, உனது மனதில் உள்ளதை என்னிடம் சொல்வதற்கு விரும்புகிறாய். அதனைச் சொல்வதற்குத் தயங்குகிறாய். கேட்டால் அப்படி எதுவும் இல்லையென்று மறைக்கிறாய். ஆனால், உனது கண்கள் உன்னைக் காட்டிக் கொடுக்கின்றன.

இனியும் உன்னால் மறைக்க முடியாது. அதனால், உன் கண்கள் சொல்லும் அந்தச் செய்தி என்னவென்று எனக்குத் தெளிவாகச் சொல்லிவிடு" என்று சொல்கிறான்.

இந்தக் காட்சியைப் புலப்படுத்தும் குறள் வருமாறு:

**"கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்**
**உரைக்கல் உறுவதொன் றுண்டு" (1271)**

நீ, சொல்லாமல் மறைத்தாலும் அதையும் கடந்து, மை தீட்டப்பட்ட உனது கண்கள் எனக்குச் சொல்ல விரும்பும் செய்தியொன்று இருக்கிறது. (அதை நீ எனக்குத் தெளிவாகச் சொல்லிவிடு) என்பது இதன் பொருள்.

**பெண்மை சற்று அதிகமோ!**

அவள் நாணத்தினால் பேசாமல் நிற்கிறாள். அவளின் மௌனத்தைக் கலைக்க வேண்டும் என்று அவனுக்கு ஆர்வமாக இருக்கிறது. இரண்டு வார்த்தைகளாவது அவள் பேசமாட்டாளா? என்று அவனது இதயம் துடிக்கிறது. அதனால் அவளின் வாயைக் கிளறுவதற்காகத் தோழியிடம் பேசுவதுபோல அவளைச் சீண்டுகிறான். "பெண்களுக்கு இருக்க வேண்டிய அச்சம், நாணம் முதலிய பெருமைக்குரிய குணங்கள் நமது ஆளுக்குச் சற்று அதிகமாகவே இருக்கிறது போலத் தெரிகிறதே" என்று சொல்கிறான். அது புகழ்ச்சியா? கேலியா? என்று தெரியாமல் அவள் தடுமாறுகிறாள். அதற்காகத்தானே அவன் அப்படிச் சொன்னான். எப்படியோ அவள் தன்னுடன் உரையாட வேண்டும் என்பதுதானே அவனது நோக்கம்!

**"கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்**
**பெண்நிறைந்த நீர்மை பெரிது" (1272)**

என் கண்நிறைந்த அழகும் மூங்கிலைப் போன்ற தோளும் கொண்ட எனது காதலிக்குப் பெண்மைக்குரிய மேன்மை மிகவும் பெரிதாக இருக்கிறது, என்பது இதன் பொருள்.

**அவளின் மனதை அறிந்து சொல்வாயா?**

அவளுக்கு அவனது உள்ளத்திலுள்ள நோக்கம் புரிகிறது. அவன் தன்னைச் சீண்டுவதன் மூலம், அவனது எண்ணத்தைத் தனக்கு குறிப்பால் உணர்த்துகிறான் என்பது அவளுக்கு விளங்குகிறது. ஆனால், எதையுமே தெரிந்துகொள்ளாதவளைப் போல, அவள் மறுபக்கம் மெல்லத் திரும்பி, வேடிக்கை பார்ப்பவளைப்போல நிற்கிறாள். சீண்டுவது ஒன்றும் இனிச் சரிவராது, அதனால், தனக்கு வேண்டுவதை அறிந்து சொல்லுமாறு தோழியிடம் கேட்பதொன்றே வழி அவன் என்று நினைக்கிறான்.

ஒரு நூலிலே பல மணிகளைக் கோர்த்து மணிமாலைகள் செய்யப்பட்டிருக்கும். பெண்கள் அந்த மணிமாலைகளை விரும்பி அணிவார்கள். அந்த மாலைகளில் உள்ள நூல் மற்றவர்களின் கண்களுக்கு வெளிப்படையாகத் தெரிவதில்லை. ஆனால், கூர்ந்து நோக்கினால் மட்டுமே தெரியக்கூடிய அளவிற்கு அந்த மணிகளினூடாகத் தெரிந்தும் தெரியாதவகையில் அவை தென்படும். அந்த நூலைப்போலத் தன் காதலியின், அழகிற்கு உள்ளே, அந்த அழகில் மறைந்தும் மறையாதவாறு, அவளின் உள்ளத்தில் இருக்கும் எண்ணக் கருத்து ஒன்று தெரிந்தும் தெரியாமல் இருக்கிறது. அதை என்னவென்று அறிந்து நீ எனக்குச் சொல்வாயா? என்று அவன் அவளின் தோழியிடம் கேட்கிறான்.

அழகிய மணிகள் மாலையாக இருப்பதற்கு ஆதாரம் அவற்றைக் கோர்த்திருக்கும் நூல். அழகிய மங்கை அவனின் காதலியாக இருப்பதற்கு ஆதாரம் அவளது உள்ளத்தில் தேங்கி நிற்கும் எண்ணம்.

மணிகளைக் கோர்த்திருக்கும் நூலையும், காதலியின் மனதிற்குள் தேங்கியிருக்கும் எண்ணத்தையும் தொடர்புறுத்தி, வள்ளுவர் தந்திருக்கும் இந்தக் குறளின் அழகு மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வகையில் உள்ளது.

**"மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை**
**அணியில் திகழ்வதொன்று உண்டு" (1273)**

மாலையாகக் கோர்க்கப்பட்டுள்ள மணிகளில் மறைந்திருக்கும் நூலைப்போல, அவளின் அழகின் உள்ளே கிடந்து எனக்கு மறைவாகப் புலப்படும் (அவளின்) எண்ணம் ஒன்று இருக்கிறது, என்பது இதன் பொருள்.

**புன்னகையின் இரகசியம்!**

முகைமொக்கு என்றால் மலராத பூ என்பது கருத்து, அதாவது மொட்டு. அதேபோல, நகைமொக்கு என்றால், வாய் திறந்து சிரிக்காத, புன்னகை என்பது பொருள். பூ ஒன்று மலர்ந்த பின்னர்தான் அதன் முழுமையான வாசனை வெளியேறும். மொட்டாக இருக்கும்போது அந்த நறுமணம் உள்ளேயிருக்கும், வெளியேறாது. அதனைப் போலவே, (வாய்விட்டுச் சிரிக்காமல்) தன் காதலி தன்னைப் பார்த்துப் புன்னகை செய்யும் போது அந்தப் புன்னகை என்ற மொட்டுக்குள், தன் மேல் அவள் கொண்டிருக்கும் காதலும் தன்னோடு சேரவேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது என்று அவன் தோழியிடம் சொல்கிறான்.

**"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை**
**நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு" (1274)**

மலராத மொட்டினுள்ளே (வெளியேறாமல்) இருக்கும் அதன் மணம் போல, வெளிப்படையாகச் சிரிக்காமல், என்னைப் பார்த்து அவள் செய்யும் புன்னகையின் உள்ளே என்னைப் பற்றிய காதல் எண்ணம் அடங்கி இருக்கின்றது, என்பது இதன் பொருள்.

**உள்ளத்தைக் காட்டும் கள்ளப் பார்வை!**

இப்படித் தோழியிடம் அவன் சொல்வதையெல்லாம் அருகே நின்று கேட்டுக்கொண்டிருக்கும் அவளுக்கு எப்படியிருக்கும்? அவளின் நெஞ்சமெல்லாம் பூ மலரும். எண்ணமெல்லாம் வண்ணத்துப் பூச்சிகளாய் வானிலே சிறகடிக்கும். தான் குறிப்பால் உணர்த்திய தன் மனக்கிடக்கைகளை, அவன் சரியாக உணர்ந்துகொண்டான் என்பதை அறியும்போது இளமையின் விளிம்பில் நிற்கும் அந்த அழகியின் காதல் மனம் துள்ளிக் குதிக்கிறது. இந்த அனுபவத்தைப் பெறுகின்ற எந்தப் பெண்ணுக்கும் அப்படித்தான் இருக்கும்.

அதற்கு மேலும் அவளுக்கு அங்கே தரித்து நிற்க முடியவில்லை. தன்னை மறந்து விடுவோமோ? எல்லை தாண்டி விடுவோமோ? என்ற பயம் வந்ததோ என்னவோ அவள், சட்டென அவனை ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தாள், அங்கிருந்து நடந்தாள். செய்வதறியாது திகைத்து நின்ற தோழி "என்ன இரு... எங்கே போகிறாய்?" என்று கேட்டுக்கொண்டே, அவளைப் பின்தொடர அடியெடுத்து வைக்கிறாள். இப்போது அவன் தோழியைப் பார்த்துச் சொல்கிறான்.

"கொஞ்சம் நில்! புன்னகையினால் தன் மனதின் உள்ளே பொதிந்து கிடக்கும் காதலை அவள் எனக்கு குறிப்பினால் காட்டினாள். அதை என்னவென்று நான் அறிந்துகொண்டேன். அவளாகச் சொல்ல மாட்டாளா? என்று ஆசைகொண்டேன். அவ்வளவுதான். ஆனால், என் உள்ளத்தைத் தெளிவாக உணர்ந்துகொண்ட அவள், இப்போது தன் ஓரக்கண்ணால் என்மீது பார்வையொன்றை வீசிவிட்டுச் செல்கிறாளே, அந்தக் கள்ளப் பார்வை சொல்லும் செய்திதான் என் காதல் வேதனைகளுக்கு அருமருந்தாக இருக்கிறது. அதை நான் உணர்ந்துகொண்டேன். அவளிடம் கூறிவிடு" என்று சொல்கிறான்.

அது என்ன மருந்து? இனியும் இவ்வாறு தனித்து இருக்காமல், விரைவாக இருவரும் இணைந்துவிடவேண்டும், அதை நீதான் அவளிடம் சொல்ல வேண்டும். அதற்கு நீதான் உதவி செய்யவும் வேண்டும், என்ற கருத்தும் இந்தக் குறளில் அடங்கியுள்ளது.

**"செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்**
**தீர்க்கும் மருந்தொன்று உடைத்து" (1275)**

அடர்த்தியாக வளையல்களை அணிந்திருக்கும் என் காதலி, என்னைப் பார்த்துச் சென்ற கள்ளப் பார்வையில், என்னை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கும் துன்பத்தைத் தீர்க்கும் மருந்து ஒன்று இருக்கிறது, என்பது இதன் பொருள்.

**(தொடரும்...)**

# நெல்லியடியில்
# IELTS வகுப்புகள்





**CALL - 077 168 68 95**

# சித்தன் சரிதம்

ஆதவன்

“நாளைய ஈழவர் நேற்றைய ஈழத்தவரின் வாழ்க்கை நிலையின் கோலங்களையும் செப்பங்களையும் அறிவதற்கு இலக்கியம் வேண்டாமா? அவர்கள் முட்டுப்பட்டு நிற்றல் ஆகாது என்ற கருணையும் இந்த எழுத்துப் பணியில் சுவறியுள்ளது” நனவிடை தோய்தலில் எழுத்தாளர் எஸ்.பொ குறிப்பிட்டது போல அடுத்த தலைமுறைக்கான முட்டுக்கட்டையை தகர்க்கும் இந்தச் சித்தன் சரிதம்.




நாவலின் ஆசிரியர் ஈழத்தின் பெருமைக்குரிய எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன். காலச்சுவடு பதிப்பகத்தால் ஒக்ரோபர் 2021 இல் வெளியிடப்பட்டது.

நினைவுகளின் பயணமாக அமையும் சரிதம். ஆழ்மனதில் பதிந்திருக்கும் வாழ்வின் கூறுகளை அதன் வெவ்வேறு படிநிலைகளில் வாசகனுக்குக் கடத்தும் படைப்பு. நீண்ட பயணத்தின் அந்தியில் நின்று திரும்பிப் பார்க்கும் சாமானியனுக்கு ஞாபகங்கள் மட்டும் மிச்சம். அதை அழகியலாக மேல் பூச்சு எதுவும் இல்லாமல் நுட்பமாக சொல்லிச் செல்கிறது. அநேகமாக ஆசிரியரின் சுய அனுபவங்கள் சம்பவங்களின் தொகுப்பாக உணர்ந்தாலும் இவ்வளவு தகவல்களை அடுக்கி முழுமையான படைப்பாகக் கொடுப்பது இலகுவான காரியமல்ல.


கூட்டுக் குடும்பமாக இருந்த அப்பு-ஆச்சிக் காலம் போய் குடும்பமாக இருக்கும் இன்றைய அப்பா-அம்மா காலம் நாளை நான் என்று தனித்து விடப்படும் அவலத்தை நோக்கிய பயணம் காலத்தின் சதியே. எளிய குடும்பம், அதன் தொடர்ச்சியான மூன்று தலைமுறைகளின் வாழ்வை மூன்று பாகங்களில் காலத்துடன் நேர்கோட்டில் நகர்த்துகிறது. மையப்பாத்திரம் சித்தன். ஆத்மார்த்தமாகப் பிணைந்து மகிழ்விக்கும் பாட்டுப்பெட்டியும் கூடவே பயணிக்கும். அவனின் பாலன், காளை(விடலை), முதுமகன் என்ற மூன்று பருவங்களே அப்பாகங்கள். அப்பு என்று சித்தனின் வயதையொத்த மூன்றாம் தலைமுறையால் அழைக்கப்படும் சித்த மருத்துவர் அருணாசலம், அவனின் தாத்தா. அவரின் வரலாறாக விரிகிறது “பாலன்” என்ற முதல் பாகம். கிட்டத்தட்ட 1950 தொடக்கம் 1960 வரையான காலம். அடுத்து வரும் பாகம் காளை. அவனின் தந்தை சிவகணேசனின் பாடுகளை முதன்மையாக சொல்லிச் செல்கிறது. இந்தப் பாகம் முடியும் போது 83 கலவரம்.

இறுதியில் முதுமகன், சித்தன் முதிர்ந்த மனிதனாகும் போது வடக்கில் போர் மேகங்கள் சூழும் வாழ்க்கை. அடிக்கடி நிகழும் இடம்பெயர்வுகள் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைப் போக்கும். யாழ்ப்பாணத் தமிழர்களும் கள்ளத்தோணியில் இந்தியாவுக்கு ஓடும் கர்மாவின் நீட்சியை சுட்டிக்காட்டிடவும் தயங்கவில்லை.

யாழில் இருந்து தென்மராட்சிக்கு நிகழ்ந்த இடம்பெயர்வை முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றிய சம்பவத்துடன் ஒரு ஒப்பீடு பின்வருமாறு கூறப்படுகிறது,

“அதுவும் நாங்கள் அனுப்பேல இதுவும் நாங்களாக வரேல”, “எங்கட கையில் என்ன இருக்கு எல்லாம் அவன் செயல்” என்று பூடகமாகச் சொல்லிச் செல்கிறது.

“எளிய வாழ்வு, உயர்ந்த உள்ளம், பரந்த அன்பு, இந் நான்குமே இம்மண்ணுலகிலேயே ஒருவருக்கு விண்ணுலக வாழ்வை அளிக்க வல்லன” பொதுவான கருத்து என்றாலும் யாரும் கைக்கூலி கொள்ள விரும்பாத கூறுகள். ஆசை இவற்றை விலக்கி வைக்கும்.




இதற்கு மறுதலையாக இன்னொரு பார்வையையும் காளியாட்ட வழிபாட்டின் ஆதாரத்துடன் ஆறண்ணை என்ற சித்தனின் நண்பன் மூலம் முன்வைக்கிறார்.

“உயிரை விட்டு உழைச்ச காசை இப்படி வானம், வெடி, ஸ்பீக்கர், எண்டு செலவழிக்குதுகள் என்ற சித்தனின் கேள்விக்கு ஆறண்ணைச் சொல்லும் பதில் இன்றும் என்றும் சமூகத்தில் குறிப்பாக இந்துக் கோவில்களில் நடக்கும் ஆடம்பரத் திருவிழாக்கள் பற்றிய கரிசனையே.

“வாழ்க்கையின் அர்த்தம் என்று எவற்றை முன்னிறுத்துகிறோம்? இந்தக் கேள்விக்கான விடை மனிதனின் நம்பிக்கை, திருப்தி, சந்தோஷம், சுயமரியாதை போன்ற காரணிகளில் அடங்கியிருப்பது மட்டுமில்லை அவற்றைச் சார்ந்த தொழில்களுக்கும் வேறு மார்க்கம் இல்லையே.”

அறிவு முதிர்ச்சி இவற்றை கேள்வி கேட்டு எள்ளி நகையாடும். ஒருகாலத்தில் அதுவும் சின்னச் சின்ன சந்தோஷத்தில் தன்னை ஒப்புக் கொடுக்கும். பின் நவீனத்துவம் என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி சந்தோஷம், திருப்தி மீது கேள்வி கேட்கும் இன்றைய உலகின் மேதமையாளர்கள் அந்திம காலத்தில் அவற்றுக்கு ஏங்கும் போது இக்கேள்விகள்கூட மீண்டும் உடைக்கப்படும்.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் சார்ந்த யதார்த்தங்களை சில இடங்களில் காட்டவும் தவறவில்லை. “சிங்களவர்களில் அரைவாசி ஆட்கள் ஆதித் தமிழர்களா?” என்று கேட்கும் மாணவனை எண்பதுகளில் வடக்கில் ஆசிரியர் ஒருவர் “அதைப் பேசாதே” என்று அதட்டும் அன்றைய அரசியலைக்கூட போகிற போக்கில் தொட்டுச் செல்கிறது.

வடக்கில் குறிப்பாக வலிகாம ஊர்களான சுதுமலை, மானிப்பாய் வட்டாரங்களை கதையில் உருவகப்படுத்தியதும் மக்களின் பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், பண்பாட்டு விழுமியங்கள், தொழில்கள், உறவுமுறைகளும் அவற்றுக்குள் இருக்கும் பாசப் பிணைப்புகளும் அவற்றை கோர்வையாக அடுக்கிய கோட்டை என்றே சொல்லலாம்.

பல வட்டாரப் பேச்சுவழக்கு வார்த்தைகள் நாவல் முழுவதும் வருகிறது. மற்ற பிரதேச மக்களுக்கு புரிதலில் இருக்கும் தடையைக் களைய விளக்கத்தை இறுதியில் கொடுத்திருக்கலாம். உதாரணமாக தொக்கை, சிலமன், குத்திமுறிவு, வெப்பியாரம், லோட்டி, மசுந்தி, உன்னாணை, அம்மாவாணை, நூர்த்தல், தெண்டிக்கிறது என்று வார்த்தைகள் பெருகிக்கொண்டே செல்கிறது. பொதுமையாக அதேவேளை ஆழமான வாசிப்பைக் கோரும் படைப்பு. நாவல் என்பதையும் தாண்டி இது ஒரு ஆவணம். அடுத்துவரும் தலைமுறைகளுக்கு கடந்த காலத்தில் கண்ணாடியாக சித்தன் சரிதம் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

## 81

ரமணி

ஜோசப் தளியத் - கீழ்ப்பாக்கம் பகுதியில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருந்த ஸ்ரூடியோ ‘சிட்டாடல்’. கேரளாவின் திருவனந்தபுரத்திலிருந்து சினிமா கனவுடன்மெட்ராஸ் வந்தவர் ஜூனியர் ஜோசப் தளியத். இவர் ‘நியூடோன் ஸ்ரூடியோ’வின் கலை இயக்குநர் எஃப்.நாகூரின் உதவியுடன் ‘சிட்டாடல் பிலிம் கார்ப்பரேஷன்’ என்ற நிறுவனத்தைத் தொடங்கி படம் தயாரித்தார்.

இந்தப் பேனரில் வந்த முதல் படம் ‘ஞான சௌந்தரி’. 1948 இல் டி.ஆர்.மகாலிங்கம், எம்.வி.ராஜம்மா நடிப்பில் வெளியான இந்தப் படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது. இதன் பிறகு, ‘சிட்டாடல்’ என்ற பெயரில் சொந்த ஸ்ரூடியோவை உருவாக்கினார் ஜோசப் தளியத். பின், 1950 இல் மகாலிங்கம் நடிக்க ‘இதயகீதம்’ என்ற படத்தை முதலில் இயக்கினார்.

பின் 1960 இல் ஆனந்தன் கதாநாயகனாக நடிக்க ‘விஜயபுரி வீரன்’ படத்தை இயக்கினார். இதன் வழியே ‘இதய கீதம்’, ‘விஜயபுரி வீரன்’, ‘இரவும் பகலும்’, ‘காதல் படுத்தும் பாடு’ போன்ற படங்களைத் தயாரித்து இயக்கினார்.

இதில், ‘இரவும் பகலும்’ படத்தில் நடிகர் ஜெய்சங்கரை அறிமுகப்படுத்தினார். ‘காதல் படுத்தும் பாடு’ படத்திற்குப் பிறகு அவர் படங்கள் தயாரிப்பதையும் இயக்குவதையும் நிறுத்திக் கொண்டார். இந்தச் ‘சிட்டாடல் ஸ்ரூடியோ’ இருந்த இடம் கல்லூரியாகவும் சிறுவர் இல்லமாகவும் மாறிவிட்டது.

சிட்டாடல் பிலிம்ஸ் சார்பில் படங்களைத் தயாரித்து டைரக்ட் செய்து கொண்டிருந்த ஜோசப் தளியத் ‘மல்லிகா’ என்ற படத்தை உருவாக்கினார், இதில் ஜெமினியும் பத்மினியும் நடித்தார்கள். கண்ணன் என்ற இளைஞன் இதில் ‘வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே’ என்ற பாடலுக்கு நடித்திருந்தார். மல்லிகா எதிர்பார்த்த வெற்றியைத் தராததால் தான் அடுத்து தயாரிக்கும் படத்தை புதுமுகங்களைப் போட்டு தயாரிப்பது என தீர்மானித்த தளியத் அப்படத்திற்கு அதிரடியாக கண்ணனை கதாநாயகனாகத் தெரிவு செய்தார். கண்ணன் சேலத்தைச் சேர்ந்தவர் முஸ்லிமான அவரின் பெயர் ஹக்கீம். கண்ணன் என்று பெயர் சூட்டியிருந்தார்.

தன் படத்துக்கு கதாநாயகன் ஆக்கிய கையோடு அவர் பெயரையும் ஆனந்தன் என்று மாற்றி விட்டார். நடனம், சண்டை என்பவற்றில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த ஆனந்தன் விஜயபுரி வீரன் படத்துக்கு நன்கு பொருந்தினார். இவருக்கு ஜோடியாக ஹேமலதா என்ற நாடக நடிகை ஒப்பந்தமானார். பிரெஞ்சு நாவலாசிரியரான அலெக்சாண்டர் டூமாஸ் எழுதிய ‘ஸ்றீமத் கிடிஎஸ்’ என்ற கதையை தழுவி ஏ.சி.திருலோகச்சந்தர் இப்படத்தின் கதையை எழுதி உதவி டைடக்ரராகவும் தளித்திடம் பணியாற்றினார். படத்திற்கான வசனங்களை நாஞ்சில் நாடு ராஜப்பா எழுதினார்.

இந்தப்படத்தின் மூலம் அறிமுகமான ஆனந்தன், ராமராவ் ஆகியோர் பிற்காலத்தில் புகழ் பெற்றார்கள். ஆனந்தனின் மகளான லலிதா குமாரியை பிற்காலத்தில் நடிகர் பிரகாஷ்ராஜ் திருமணம் செய்து கொண்டார். ஜோசப் தளியத் உருவாக்கி 1960 இல் வெளிவந்த விஜயபுரி வீரன் வெற்றிப்படமானது.

தமிழ்த் திரையுலகில் கதையாசிரியர், திரைக்கதை எழுத்தாளர், இயக்குநர், நடிகர், தயாரிப்பாளர் எனப் பன்முகத்தன்மையுடன் இயங்கிவந்தவர் கலைஞானம். சினிமாத்துறையில் அரை நூற்றாண்டு அனுபவம் வாய்ந்த இவர், தன்னுடைய திரையுலக அனுபவங்கள் மற்றும் சுவாரஸ்யமான சம்பவங்கள் குறித்துப் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்துள்ளார். நடிகை வாணி ஸ்ரீ திரைத்துறையில் அறிமுகமானது குறித்து அவர் பகிர்ந்து கொண்டவை பின்வருமாறு,









நடிகை வாணி ஸ்ரீ என்னுடைய கதையில் தான் கதாநாயகியாக அறிமுகமானார். துணை நடிகை கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக வந்த அவரை நான்தான் கதாநாயகி கதாபாத்திரத்திற்குப் பரிந்துரை செய்தேன். அவர் திரைத்துறைக்குள் அறிமுகமானதற்குப் பின்னால் ஒரு சுவாரஸ்ய சம்பவம் உள்ளது. அது பற்றி உங்களுக்குக் கூறுகிறேன்.

‘காதல் படுத்தும் பாடு’ கதை தான் என்னுடைய முதல் கதை. அதை 1965 இல் முதல்முறையாக ஒரு தயாரிப்பாளரிடம் விற்றேன். அந்தக் கதையின் மூலம் வாணி ஸ்ரீ, சுருளிராஜன், எடிட்டர் வெள்ளைச்சாமி எனப் பலர் அறிமுகமானார்கள். ‘காதலிக்க நேரமில்லை’ படத்தில் நடித்த ஜெயஸ்ரீயைத் தான் கதாநாயகியாக அந்தப் படத்தில் முதலில் ஒப்பந்தம் செய்திருந்தனர். ஜெய்சங்கர் கதாநாயகன். தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் இந்தப் படத்தை எடுக்கத் திட்டமிட்டிருந்தனர். தெலுங்கில் சவுகார் ஜானகியின் தங்கை கிருஷ்ண குமாரியை ஒப்பந்தம் செய்தனர். அவருக்குத் தோழியாக துணை கதாபாத்திரத்தில் நடிக்க வாணி ஸ்ரீ ஒப்பந்தம் செய்யப்பட்டார். ‘காதல் படுத்தும் பாடு’ படம் தொடங்க இருந்த நேரத்தில், ஜெயஸ்ரீக்கு ஹிந்தியில் ஒரு பெரிய படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. அந்தப் படத்தை முடித்துவிட்டு விரைவில் வந்துவிடுவேன் எனக் கூறிவிட்டு பாலிவுட்டிற்கு சென்றுவிடுகிறார் ஜெயஸ்ரீ. பின் சில நாட்கள் கழித்து தன்னால் உடனடியாக வரமுடியாத நிலை இருப்பதாகவும் வேறு யாரை யாவது வைத்து படம் எடுத்துக்கொள்ளுங்கள் என ஜெயஸ்ரீ கூறிவிடுகிறார்.

வேறு வழியில்லாததால் முதலில் தெலுங்கில் எடுக்கலாம் என்று முடிவெடுத்து தெலுங்கு படப்பிடிப்பைத் தொடங்குகின்றனர். நான் அங்கு சேர் போட்டு அமர்ந்திருந்தேன். தெலுங்கு நாயகி கிருஷ்ணகுமாரியும் வாணி ஸ்ரீயும் மேக்கப் ரூமில் இருந்து வெளியே வந்தனர். கிருஷ்ண குமாரியைவிட வாணி ஸ்ரீ அழகாக இருந்ததால் அவர் யாரென்று விசாரித்தேன். அவர் தோழியாக நடிக்க இருப்பதாக ஒருவர் கூறினார். அவரை இதற்கு முன்பு எங்கோ பார்த்தது போல இருந்ததால், அவரை அழைத்து யாரென்று விசாரித்தேன். கடைசியில் அவர் நான் வசிக்கும் தெருவிற்கு பக்கத்துத் தெருவில் வசிப்பதாகக் கூறினார். வாணி ஸ்ரீக்கு மாமா ஒருவர் இருந்தார். ஐந்து மணிக்கு உளுந்த வடை போட்டு ஒரு டின்னில் எடுத்துக்கொண்டு வருவார். அந்தத் தெருவில் இருக்கிற குழந்தைகளுக்கு வடை கொடுத்துவிட்டு காசு வாங்காமல் செல்வார். அந்தத் தெருவில் 50 குழந்தைகளுக்கும்மேல் இருப்பார்கள். பின், கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் வருவார். அந்தக் குழந்தைகளின் தாய்மார்கள் வடைக்கான காசை அவரிடம் கொடுப்பார்கள். சில தாய்மார்கள் இன்று காசில்லை என்பார்கள். ‘இருக்கட்டுமா… குழந்தைதானே சாப்பிட்டுச்சு, இன்னைக்கு இல்லனா நாளைக்கு கொடுங்க’ எனப் பெருந்தன்மையுடன் கூறுவார். அந்த வருமானத்தை நம்பித்தான் வாணி ஸ்ரீ மாமாவின் குடும்பம் இருந்தது. அவர்கள் வீட்டில்தான் வாணி ஸ்ரீ தங்கியிருந்து சினிமாவில் நடித்து வந்தார்.

அன்று ஷூட்டிங் முடிந்து வீட்டிற்கு வந்து என் மனைவியிடம் அந்தப் பெண் குறித்து கேட்டேன். ஏதோ நாடகத்தில் நடித்து விட்டு வரும் போது அவரை பார்த்திருப்பதாக என் மனைவி கூறினார். அந்த தெலுங்கு ஷூட்டிங்கும் ஓரிரு நாளில் நின்று விட்டது. பின், தமிழில் எடுக்க முடிவெடுத்த இயக்குநர் ஜோசப் தளியத், ஏதாவது நடிகை இருந்தால் கூறுங்கள் என என்னிடம் கேட்டார். நான் உடனே, தெலுங்கில் துணை கதாபாத்திரத்தில் நடித்த வாணி ஸ்ரீயின் பெய ரைக் கூறினேன். அவர் சிறிது யோசித்துவிட்டு, அவர் பொருத்தமாக இருப்பார்… அவரையே நடிக்க வைப்போம் என்றார். பின், வாணி ஸ்ரீயை அழைத்து ஜோசப் தளியத் பேசினார். “நீதான் நம்ம படத்துக்கு ஹீரோயின், ரெடியா இரு… வண்டி வரும்” என்றார். மறுநாளே படப்பிடிப்பு தொடங்கியது. அந்தப் படம் வெளியான போது மிகப்பெரிய வெற்றி கிடைத்தது. அதற்குப் பிறகு ‘வசந்த மாளிகை’ மாதிரியான பல பெரிய படங்களில் நடித்து மிக உயர்ந்த இடத்திற்குச் சென்றார்.



# பி.ஜே.பி கூட்டணியிலிருந்து...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வெற்றி பெறமுடியாது என்பதை நன்கு உணர்ந்த எடப்பாடி காய் நகர்த்தியுள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தலுக்குப் பின்னர் இரண்டு கட்சிகளும் கைகோர்த்தால் ஆச்சரியப்பட முடியாது என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க, பா.ஜ.க உடனான கூட்டணியை முறித்துக்கொண்டுள்ளது. அ.தி.மு.கவினர் இதை பட்டாசு வெடித்து கொண்டாடி வருகின்றனர். ஒரு கூட்டணியில் இருந்து விலகியதற்காக இப்படி கொண்டாட்டம் நடைபெறுவதை அரசியல் நோக்கர்கள் அதிசயமாகவே பார்க்கின்றனர். 2021 இல் நடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் பா.ஜ.கவுக்கு 20 இடங்கள் ஒதுக்கப்பட்டன. கோவை தெற்கு, மொடக்குறிச்சி, நாகர்கோவில், நெல்லை ஆகிய தொகுதிகளை கைப்பற்றி, 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சட்டசபைக்குள் நுழைந்தது பா.ஜ.க அதேநேரத்தில் ஆட்சியை இழந்த அதிமுக எதிர்க்கட்சித்தலைவர் வரிசையில் அமர்ந்தது. அப்போது பா.ஜ.க தலைவராக இருந்த எல்.முருகன், மத்திய இணை அமைச்சரானதை அடுத்து பா.ஜ.கவின் புதிய தலைவராக ஐ.பி.எஸ் அதிகாரியாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று விவசாய பணியில் ஈடுபட்ட அண்ணாமலை நியமிக்கப்பட்டார்.

பா.ஜ.க மேலிடம் கூறித்தான் அண்ணாமலை அ.தி.மு.கவை விமர்சித்து வருகிறார். அண்ணாமலையின் விமர்சனத்தை அ.தி.மு.க தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழ்நாட்டில் பா.ஜ.கவால் காலூன்றவே முடியாது. தேர்தலில் பா.ஜ.க தனியாக நின்றால் நோட்டாவைவிட குறைந்த வாக்குகளே பெறும் என கடுமையான விமர்சனங்களை முன்வைக்கப்பட்டன. இதெல்லாம் நாடகம் என்று தி.மு.க உள்ளிட்ட கட்சியினர் கூறி வந்தனர். எதுவுமே சொல்லாமல் அமைதி காத்து வந்தார் எடப்பாடி பழனிச்சாமி. இந்தநிலையில் தான் அ.தி.மு.கவின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நேற்றைய தினம் நடைபெற்றது. அந்தக்கூட்டத்தில் பா.ஜ.க உடனான கூட்டணியை முறித்துக்கொள்வதாக அ.தி.மு.க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த வெற்றியை பா.ஜ.கவினர் கொண்டாடி வருகின்றனர். கூட்டணி முறிவு பற்றி எதுவும் பேசக்கூடாது என பா.ஜ.க தலைமை உத்தரவிட்டுள்ளது. அண்ணாமலையும் இதுவரை எதுவுமே வாய் திறக்கவில்லை. இதுவும் நாடகம்தான் என்றும் லோக்சபா தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்கள் உள்ள நிலையில் எதுவும் நடைபெறலாம் என்றும் கூறி வருகின்றனர் அரசியல் நோக்கர்கள். ■









---

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# ரணிலின் அமெரிக்கப் பயணத்தின்...

'பொருளாதார வீழ்ச்சியுள் சிக்கியுள்ள நாட்டை மீட்டெடுப்பதே தனது ஒரே இலக்கு' என்பதை வலியுறுத்தியதோடு சவால்களைக் கண்டு அஞ்சி ஒதுங்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேசமயம் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தான் மறக்கவில்லை, அவற்றை நிறைவேற்றுவதில் உரிய கவனம் செலுத்தப்படும் என பொதுநலவாய செயலாளர் நாயகத்திடம் வலியுறுத்திக் கூறிய ஜனாதிபதி இலங்கைக்கும் பொதுநலவாய செயலகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் ருவாண்டாவில் நடைபெற்ற மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பொதுநலவாய செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லாண்டுடன் கலந்துரையாடியுள்ளார். சவால்களை வெற்றி கொள்வதே எனது இலட்சியம், சவால்களைக் கண்டு பயந்து ஒருபோதும் தான் ஒதுங்கப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுநலவாயத்தின் செயற்பாடுகளுக்கு இலங்கை முன்னுரிமை கொடுக்கும் எனவும் அவர் உறுதியளித்திருக்கின்றார்.

உலக நாடுகள் ஒற்றுமையுடன் பயணித்தால் மட்டுமே சவால்களை வெற்றி கொள்ள முடியும் எனவும் கருத்து முரண்பாடுகளை கலந்துரையாடல்கள் மூலம் நிவர்த்தி செய்ய முடியும் எனவும் அத்தகைய ஆளுமை அனைத்து நாடுகளிடமும் ஏற்பட வேண்டும், வேற்றுமையில் ஒற்றுமை ஏற்படுவதன் மூலம் மட்டுமே உலகம் அமைதிப் பூங்காவாக மாறமுடியும் என்பதை ஜனாதிபதி ரணில் உலகத் தலைவர்களிடம் வெளிப்படையாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றார். ■

---

# கிளிநொச்சியின்...

( 02 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனால் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். ஆகவேதான் இதைக்குறித்த கேள்விகள் மக்களிடம் நிறைந்துள்ளது.

இந்தச் சூழல்கேடாக்கிகளின் முகத்தில் கரியைப் பூசவும் அவர்களை நிராகரிக்கவும் இந்த மாதிரி நேர்மையான உழைப்பாளர்களை மதித்துக் கௌரவப்படுத்துவது அவசியமானது. இந்த மாதிரி நிகழ்வுகள் கிராமங்கள் தோறும் நடக்க வேண்டும். கிராமங்களுக்கு அப்பால் பிரதேச மட்டத்திலும் மாவட்ட அளவிலும் தேசிய ரீதியாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேயளவுக்கு சூழல் கேடாக்கிகள் மீதும் சமூக விரோதிகள் மீதும் வெறுப்பையும் விலக்கையும் மேற்கொள்ள வேண்டும்.

இந்த நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்ட அவ்வளவு பேரும் நல்ல உழைப்பாளிகள். பொருளாதார ரீதியில் பெரிய வளர்ச்சியை எட்டமுடியாது விட்டாலும் தாம் வாழ்கின்ற சூழலில் உள்ள மக்களிடத்திலே உழைப்பினாலும் பண்பான நடத்தையினாலும் மதிப்பைப் பெற்றவர்கள்.

தாமுண்டு, தம்முடைய தொழிலுண்டு, தம் வாழ்க்கை உண்டு என்ற வகையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், ஊருக்கு நல்லது எதுவாக இருந்தாலும் தங்களால் முடிந்த பங்களிப்பைச் செய்கின்றவர்கள், மற்றவர்களுக்கு தீங்கில்லாதவர்கள், சூழலையும் வளத்தையும் கெடுக்காதவர்கள், சூழலையும் வளங்களையும் பராமரித்துக் கொண்டே, அந்த வளங்களை வைத்துத் தமது தொழில்களைச் செய்வோர், அதன் மூலம் வாழ்க்கைக்கான ஆதாரங்களை உருவாக்கிக் கொள்வோர், எல்லாவற்றுக்கும் அப்பால் எந்தச் சூழலிலும் உழைத்து நேர்மையாக வாழ முடியும் என்று நிரூபித்துக் கொண்டிருப்பவர்கள்.

இன்றைய காலத்தில் இது முக்கியமானது. வளங்களைக் கொள்ளையடித்து, சூழலுக்குக் கேடு விளைத்துத் தமது வருவாயைப் பெருக்குவோர் பெருகிக் கொண்டிருக்கும் சூழலில் இந்த முன்மாதிரிகள் அவசியமானவை. ■

தொடர்கதை

# இரு மலர்கள்

யாழ் சத்யா

## மாறுவாளா அருண்யா?

ஸாம் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிய போது அங்கே அருண்யா அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் கண்களில் முட்டிய நீரை சுண்டி விட்டபடி உள்ளே நுழைந்தவனைக் கண்டதும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவள் உடனே சந்தோசமாக எழுந்து அவனை நோக்கி விரைந்தாள்.

“ஸேர்... அப்பிடியே இருக்கிறீங்க... பத்து வருசமாச்சு பார்த்து... ஆனா ஒரு மாற்றத்தையும் காணேல்ல... என்ன ஸேர் எங்களை இப்பிடி ஏமாத்திட்டிங்களே... ஒரு வெள்ளைக்காரிய கூட்டிட்டு வருவியள் என்று பார்த்தால் இப்பிடி தனியாக வந்து நிக்கிறியளே...”

பழைய அருண்யாவாய் படபடத்தவளை வியப்புடன் பார்த்தான். உண்மையில் அவள் கதை கேட்ட பின் எப்படி அவளோடு சாதாரணமாக கதைக்க முடியும் என்று சிந்தித்துக் கொண்டிருந்தவனுக்கு பழைய அருணே முன்னால் தெரியவும் மனசுக்குள்ளே சிறிதே ஆறுதலடைந்தான்.

“ஹா ஹா... என்ன மாறணும் அருண்? வெள்ளைக்காரி எல்லாம் நமக்கு சரிவராது... அவளுகள் நாலு நாள்ல விட்டிட்டுப் போய்டுவாளுகள். பிறகு நான் என்ன செய்றதாம்? இப்பிடி தனியாக இருக்கிற எவ்வளவு சுதந்திரம் தெரியுமா?”

“நான் சும்மா பம்பலுக்குச் சொன்னன். கையில என்ன நடந்த சேர்? ஊருக்கு வந்த உடனேயே வீரத் தழும்பு வாங்கியாச்சா?

“ஹூம்... மோட்ட சைக்கிளால விழுந்திட்டன். அதுதான்...

நீர் மாறவே இல்லை அருண்... தலைமுடி மட்டும் வளர்ந்து இருக்கு... ஏன் இப்ப கறையான் அரிக்கிறேலையோ?”

அவன் கேள்வியில் சிறிதே முகம் கறுத்தவள் பின்னர் தெளிந்து பழையபடி பதில் கூற ஆரம்பித்தாள்.

“ஹி ஹி ஹி... நோ சேர்... கொஞ்ச நாளைக்கு வேணாம் என்று கறையான் புத்தை அழிச்சிட்டன்... ஸோ இப்ப அரிக்கிறேல்ல...”

“வந்து நிறைய நேரமா அருண்? ஸொரி... நான் மந்திகைக்கு மருந்து கட்டப் போயிருந்தன்... என்ன குடிக்கிறீர்?”

வீட்டவனாய் மன்னிப்புக் கேட்டு உபசரித்தான்.

“அது பரவாயில்லை ஸேர். அப்பா கொண்டு வந்து விட்டிட்டுப் போறார். கொஞ்சத்தால வருவார். லண்டனால வந்திருக்கிறீங்க... ஒரு சொக்லேட்டைக் கண்ணில காட்டுறீங்க இல்லையே. இதெல்லாம் அநியாயம்...”

“ஹா ஹா... இன்னும் சொக்லேட் பைத்தியம்தானா? இரும்... கொண்டு வாறேன்...”

விதம் விதமாக சொக்லேட்சை கொண்டு வந்து அவள் முன்னால் கடை பரப்ப, மறுக்காது ஆசையோடு எடுத்து உண்டாள். அவளையே வாஞ்சையாகப் பார்த்துக் கொண்டிருந்தவனை நோக்கி,

“லண்டன் லைப் எப்பிடி ஸேர்? உங்களுக்கு பிடிச்சுதா? என்ன வேலை செய்றீங்க? அங்க ப்ரண்ட்ஸ் எல்லாம் எப்பிடி? வெள்ளைக்காரங்கதானா? தமிழ் ஆக்கள் நிறையப்பேர் இருக்கினமா? இங்க நிரோஜன் அண்ணாவையோட கதைக்கிறேல்லையா?”

மூச்சு விடாமல் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்தவளை,

“ஐயோ... அருண்... ஒவ்வொன்றாக கேளும்... இப்பிடி மூச்சு விடாமல் கேட்டால் நான் எதுக்கென்று பதில் சொல்லுறது?”

“ஹி... ஹி... ஹி... சரி ஒவ்வொன்றாகச் சொல்லுங்கோ ஸேர்.”

“போன புதுசுல வெள்ளைக்காரன்ட இங்கிலிஷ் புரியாமல் ரொம்ப கஷ்டப்பட்டன்... ஸ்ரூடன்ற் விசாவிலதானே போனது.

படிப்பும் பார்ட் டைம் வேலையுமாக நித்திரை கொள்ளவே நேரம் கிடைக்கல...

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக காசு சேர்த்து சொந்தமாக ஒரு டக்ஸ் பேர்ம் ஒண்டு ஆரம்பிச்சிட்டன். அப்புறம் அதை கவனமாகக் கொண்டு நடத்திறதிலேயே என் கவனம் எல்லாம்...

அப்பா இருக்கிற வரைக்கும் அவரோட கதைப்பன்... பிறகு இங்க யாரோடயும் கதைக்கிறதில்லை... லண்டனிலயும் பெருசா தமிழ் ஆக்களோட பழகிறேல்ல....

அப்பாட்டகூட கவியைப் பற்றியோ உங்களைப் பற்றி எதுவும் சொல்லக் கூடாது என்று




சொல்லிட்டன். நிரோஜன், சுதன், சுதர்சன் ஒருத்தரோடயும் கதைக்கிறதில்லை...

பேஸ்புக், ருவிட்டர் எதுவும் யூஸ் பண்ணுறேல்ல... எங்க நான் இந்த சோசல் மீடியாவில இருந்தால்  கவி எதையாவது பார்த்து அவளுக்கு என் ஞாபகம் வரக்கூடாது, எனக்கும் அவள் ஞாபகம் வரக்கூடாது என்று நினைச்சன்... அதுதான் உம்மோட கதைக்கிறதையும் விட்டன்...”

ஆனால், ஸாம் அருண்யாவோடு பேசுவதை நிறுத்தியதற்கு காரணமே வேறு. வாரந்தோறும் தவறாமல் அருணி ஸ்கைப்பில் அழைத்து வளவளப்பாள். அவளின் அன்பிலும் உரிமை மிகுந்த பேச்சும் முற்போக்கு சிந்தனை உடைய ஸாமை கொஞ்சம் பயம் கொள்ளச் செய்தது.

தமக்கையால் ஏமாற்றப்பட்டு விட்டானே என்ற பரிதாபாத்தில் இவள் பிறகு காதல், கண்றாவி என்று தொடங்கிவிட்டால் ஏற்கெனவே அனுபவப்பட்டும் திரும்ப அதே குடும்பத்துப் பெண் வாழ்க்கையோடு விளையாடலாமா? என்றுதான் சூடுகண்ட பூனையாக ஸாம் அருணியை விட்டு ஒதுங்கியது.

தந்தை எத்தனையோ தரம் கவி, யாதவ் பற்றியும் அருணி வன்னிக்குள் மாட்டுப்பட்டது பற்றியும் சொல்ல வாயெடுத்தும் இவன் எதையும் காதில் விழுத்தாது தொலைபேசியை அணைத்து விடுவான். அந்தோணியும் சிறிது காலத்தில் மாரடைப்பால் படுக்கையிலேயே உயிர் பிரிந்திருந்தார். தந்தையை இறந்த கோலத்தில் பார்க்க மனமற்று இவன் இறுதிக் கிரியைக்குக்கூட ஊருக்கு வரவில்லை. அனைத்தையும் மனசுக்குள் எண்ணி நொந்தபடி அருணியிடம் தொடர்ந்தான்.

“ஆனால், நான் இப்பிடி ஒதுங்கி இருந்த எவ்வளவு பெரிய பிழை என்று இப்பதானே புரியுது... நான் இப்ப ஊருக்கு வாறது அண்ணாவைக்குக்கூடத் தெரியாது. வந்து இறங்கியதும் அண்ணா கவியைப் பற்றிச் சொன்னதைக் கேட்டதும் அப்பிடியே நொறுங்கிப் போய்ட்டன்.

அதுதான் கவிட்ட என்னைக் கல்யாணம் பண்ணச் சொல்லி விசயம் தெரிஞ்ச உடனேயே போய்க் கேட்டன்... ஆனால், அவ யாதவ்வ ரொம்ப லவ் பண்ணுறா... அவனை மறந்து என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவே மாட்டன் என்று சொல்லிட்டா...

அவ யாதவை அவ்வளவு லவ் பண்ணுறதை நினைச்சு ரொம்ப சந்தோசமா இருக்கு. ஆனால், அவனோட சேர்ந்து வாழ அவளுக்குக் குடுத்து வைக்கேலையே என்றதை நினைக்க தாங்க முடியாத வேதனையா இருக்கு... ஆண்டவர் ஏன்தான் இப்பிடி எல்லாரையும் சோதிக்கிறாரோ தெரியேல்ல...”

நீண்ட பெருமூச்சோடு வேதனையாய் சொல்லி முடித்தான்.

“என்ன செய்றது சேர்... எல்லாம் எங்கட தலைவிதி...”

கண்களில் துளிர்த்த நீரை இமைகளைக் கொட்டி அடக்கிய படி சோகமாய் பதிலுரைத்தாள் அருண்யா. அப்போது “டேய் மச்சான்...” அழைப்போடு உள்ளே வந்தார்கள் ஸாமின் ஆருயிர் தோழர்கள் மூவரும். “வாவ் அருண்யா... வட் ஏ சர்ப்ரைஸ்... நீரும் இந்த ஊரிலதான் இருக்கிறீரா? ஆளைக் கண்ணில காணக் கிடைக்குதில்லேயே...”

“கவி ஒகேவா இருக்கிறாளா அருணி? யாதவ் பற்றி ஏதாவது தகவல் கிடைச்சுதா..?”

வந்த மூவரும் ஆளாளுக்கு அருண்யாவை கேள்விகளால் வறுத்தெடுக்க இங்கே கடுப்பாகினான் ஸாம்.

“ஏன்டா பக்கிகளா... ஏதோ நானும் நீங்கள் எல்லாம் என்னைத்தான் பார்க்க வந்தீங்க என்று நினைச்சுக் கொண்டிருக்க நீங்கள் என்னடா என்றால் அவளோட மல்லுக் கட்டுறியள்...”

ஸாமின் பேச்சுக் கேட்டு கடுப்பானான் சுதர்சன். “போய் ஒரு கொஞ்ச காலம் கதைச்சாய்... அதுக்குப் பிறகு எந்த தொடர்பும்  இல்லாமல் இருந்திட்டு இப்ப வந்து என்ன கனக்க கதைக்கிறாய்?” அவனைத் தொடர்ந்து சுதனும் ஸாமை விட்டு வைக்கவில்லை. “வந்து மூண்டு நாளாச்சு... இப்பவாச்சும் சொன்னியா வந்து நிக்கிறன் என்று...”

“அதுதானே... இண்டைக்கு காலமை ஃபாங்கில உன்ர அண்ணாவைக் கண்டிருக்காட்டில் எங்களுக்கு நீ வந்திருக்கிறதே தெரிஞ்சிராதே மச்சான்..”

தொடர்ந்து கோபமாக முடித்தான் நிரோஜன்.

**(மலரும்...)**

# நாயும் பேயும்

கே.ஆர்.வேலுச்சாமி

காலையில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது பக்கத்து வீட்டு நாய் டாமி தன்கூடவே வாலாட்டியபடி வந்ததைக்கண்டு ஆச்சரியப்பட்டார் நளன்.

ஐந்து வருடங்களாக அந்த நகரத்தின் முக்கிய பகுதியில் வாடகை வீட்டில் வசித்து, தனியார் நிறுவனத்தில் மேலாளராக இருந்தாலும் பக்கத்து வீட்டினர் யாரும் தன்னுடன் அவ்வளவாக நட்புடன் இருப்பதில்லை எனும் வருத்தம் இருக்கத்தான் செய்தது.

நாயின் முதலாளியான சுமன் ஒரு மாதமாக வீட்டில் இல்லாமல் வெளியூர் போனதால், அவரது நாய் டாமி உணவை விரும்பாமல் சோகமுடன் வீட்டிலும் வீதியிலும் படுத்தே கிடந்த போது நாயின் பாசத்தையும் விசுவாசத்தையும் எண்ணிப் பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள் வியந்து அதிசயித்தனர்.

கடந்த இரண்டு நாட்களாக தன்னுடன் இணக்கமாக டாமி பழகியதும் பிஸ்கட் போட்ட போது அதைத்தின்று விட்டு நேசமாக சகமனிதனைப்போல தன்னைப்பார்த்து அதன் கண்களில் கண்ணீர் வெளிப்பட்டதும் கண்டு தானும் அழுது விட்டார் நளன்.

மனைவி வாசுகி வந்து “அந்த நாய்கூட உங்களுக்கென்ன அப்படி பாசம் வேண்டிக்கெடக்குது? இந்த வீட்டுக்கு நாம குடி வந்து அஞ்சு வருசத்துல சுமனோட பொண்டாட்டி சுந்தரி கூட அஞ்சு வார்த்தைதான் பேசியிருப்பேன். நாம வாடகை வீட்ல வாழறோம்னு சொந்தமா பங்களா வீடு வெச்சிருக்கிற அவ என்னை மதிக்கிறதே இல்லை. அவ புருசனும் வெளியூர் போயிட்ட இந்த சமயத்துல நாயும் செத்துக்கித்துப்போச்சுன்னா நாமதான் விஷம் வெச்சுட்டோம்னு அவ நம்பிக்குவா. வேண்டாங்க அதத்தொரத்தியுட்டுட்டு கேட்ட சாத்துங்க” என்ற போது நளனால் மனைவியின் பேச்சைத் தட்ட முடியவில்லை.

அடுத்தநாள் நடைப்பயிற்சிக்கு சென்றபோது தன்னைத்தேடி வந்த டாமி தன்னைப்பார்த்து உளைப்பதும் சற்றுத்தூரம் ஓடுவதும் பின் திரும்பி வருவதுமென இயல்புக்கு மாறாக அதனது செயல் இருந்ததைக்கண்டு நடைப்பயிற்சி செய்வதை விட்டு, ஓரிடத்தில் நின்ற போது தனது உடையைக்கவ்வி இழுப்பதும் உடனே முள் செடிகளுக்குள் ஓடி விட்டு வருவதும் என தன்னிடம் ஏதோ சொல்ல வருகிறது என புரிந்தவாறு நாயின் பின்னே செல்ல, வெகுதூரம் ஓடி முற்புதர்கள் நிறைந்த ஒரு ஏரிப்பக்கம் நின்றது.

அங்கே முற்களைப்பிடுங்கி புதிதாக தோண்டப்பட்டு மூடப்பட்டிருந்த குழியருகே சென்று முன் கால்களால் மண்ணைப் பரைத்தபடி தன்னைப் பார்த்துக் குரைத்தபோதுதான் நளனுக்கு அதன் செயலின் அர்த்தம் புரிய ஆரம்பித்தது.

உடனே யோசனையில் ஆழ்ந்து ஒரு முடிவுக்கு வந்தவராக வீட்டிற்கு வந்து விட்டார். ஆனால், நாய் டாமி தன்னுடன் வராமல் அங்கேயே படுத்துக்கொண்டது.

“நாயோட செயல்பாடுகளை வைத்து நாம உறுதியான முடிவுக்கு வர முடியாது. வீட்டு நாய்களுக்கு இப்படியொரு புத்திசாலித்தனம் இருந்ததை நான் பார்த்ததில்லை. இருந்தாலும் நீங்க சொல்லுறதை பார்க்கும்போது ஒருவேளை உண்மையாகவும் சந்தேகப்படும்படியாகவும் இருக்க வாய்ப்புகள் அதிகம். நீங்க சந்தேகப்படற ஆளுக்காக ஏற்கெனவே கொடுத்திருக்கிற கேஸ் சம்மந்தமா ஆக்ஸிடென்ட்ல இறந்து போன அநாதைப் பிணத்தை திருச்சில பார்க்க வரச்சொல்லியிருக்காங்க. சம்மந்தப்பட்டவரோட மனைவியும் வராங்க. உங்க போன் நம்பர கான்ஸ்டபிள் கிட்ட கொடுத்திட்டுப் போங்க. நாளைக்கு கோயம்முத்தூர் வந்ததும் கூப்பிடுறேன்” எனக்கூறி கை குலுக்கி அனுப்பி வைத்த இன்ஸ்பெக்டர் சிகனின் பேச்சில் நம்பிக்கை கொண்டவராய் காவல் நிலையத்தை விட்டு வெளியே வந்து தனது காரை ஸ்டார்ட் செய்த போது பக்கத்து வீட்டு சுந்தரியும் இன்னொரு பொண்ணும் காரில் அமர்ந்தவாறு தன்னை முறைத்தவாறு பார்த்ததைக் கண்டு கொள்ளாமல் கிளம்பிச்சென்றார் நளன்.

அடுத்த நாள் காவல் நிலையத்திலிருந்து அழைப்பு வர உடனே புறப்பட்டுச்சென்று இன்ஸ்பெக்டர் சிகனைப் பார்த்தபோது “வாங்க மிஸ்டர் நளன். உங்களாலேயும் உங்க பிரண்ட் டாமியாலேயும் எங்களுக்கு பெரிய ரிஸ்க்கான வேலை ஈசியா முடிஞ்சிருச்சு. டைம் இருந்தா வாங்க நீங்க சொன்ன ஸ்பாட்டுக்குப் போகலாம்” என கூறியவர், இரண்டு காவலர்களுடன் ஜீப்பில் ஏற, நளன் தனது ஸ்கூட்டியில் அவர்களுக்கு வழிகாட்டியாக முன்னால் சென்றார்.




சற்று நேரத்தில் பெரிய கூட்டமே கூடி விட்டது. டாமிகூட அங்கே வந்து நளனை நட்பாகப் பார்த்து சுற்றிச்சுற்றி வந்தது. மண் தோண்டும் இயந்திரம் வரவழைக்கப்பட்டு தோண்டியபோது துர்நாற்றத்தைக் கண்டு பலரும் மூக்கில் துணியை வைக்க, சிலர் இடத்தைக்காலி செய்தனர்.

‘தன்னால், இல்லையில்லை டாமி நாயால் ஒரு கொலை சம்பவம் வெளியில் வரப்போகிறது. சுமன் மனைவி சுந்தரியின் கைகளில் விலங்கு மாட்டப்போகிறார்கள். கணவனைக் கொன்று விட்டு வெளியூர் சென்றிருப்பதாக நாடகமாடுகிறாள் என்பது காவல் நிலையத்தில் நின்று முறைத்துப் பார்த்த போது உறுதியாகி விட்டது’ என சிந்தனையில் ஆழ்ந்த போது, காவல் துறை வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது.

கைகளில் விலங்கு மாட்டப்பட்டிருந்த சுமனை இரண்டு காவலர்கள் அழைத்து வந்ததைப்பார்த்த போதுதான் நினைத்தது வேறு, நடந்தது வேறாக ஆகி விட்டதை நினைத்து அதிர்ச்சியுடன் இன்ஸ்பெக்டர் சிகனைப் பார்த்த போது “பொறுமையா இருங்க. கொஞ்ச நேரத்துல எல்லாம் தெரிஞ்சிடும்” என்றவர், தோண்டி வெளியே எடுக்கப்பட்ட மனித சடலத்தின் அருகே சுமனைக் கூட்டிச்சென்று சில கேள்விகளைக்கேட்ட போது ‘தன்னால் கொல்லப்பட்டு இங்கே புதைக்கப்பட்ட நண்பர் விபின் தான் இந்த சடலம்’ என்பதை ஒத்துக்கொண்டான்.

சுமனின் கல்லூரித்தோழன் விபின். இருவரும் நகரத்தில் கூட்டாக தொழில் செய்து வந்த நிலையில் தொழில் வரவு செலவுகளை சுமனை முழுமையாக நம்பிவிட, பெரும்தொகையை ஏமாற்றி, தொழிலில் நஷ்டம் காட்டி வீடு கட்டியது தெரிந்து தட்டிக்கேட்க, தன் வீட்டிற்கு வந்தால் பிரச்சினை முடியும் என கூறி அழைத்து வந்து இரவு நேரத்தில் நண்பனை தன் மனைவியுடன் சேர்ந்து அடித்துக்கொன்று இங்கே புதைத்ததாகவும் தானும் விபினும் தொழில் விசயமாக வெளியூர் சென்றது போலவும் ஹோட்டல் ரூமிலிருந்து வெளியே போன விபின் திரும்ப வரவில்லையென்றும் நான் மட்டும் வீடு வந்தால் விபின் வீட்டினருக்கு சந்தேகம் வருமென்றும் நானும் காணாமல் போனதாக என் மனைவி மற்றும் விபின் மனைவியை வைத்து காவல் நிலையத்தில் கம்ளைண்ட் கொடுக்க வைத்து நாடகமாடினேன்.

அடையாளம் தெரியாத அநாதைப் பிணத்தை விபினோட பாடின்னு சொல்லி பிரச்சினைய முடிச்சிட்டு நான் ஊருக்கு வந்திடலாம்னு போட்ட திட்டம் நான் வளர்த்தின நாயாலயே வெளிச்சத்துக்கு வரும்னு கனவுலயும் நினைக்கவில்லை” என்று தன் நாய் டாமியை கொலை வெறியுடன் பார்த்தவாறு வாக்குமூலமாகக் கூறிக்கொண்டிருந்த போது யாரும் எதிர்பாராத விதமாக திடீரென சுமன் மீது ஆக்ரோசமாகப் பாய்ந்தது டாமி.

காவலர்கள் கட்டுப்பாட்டிலிருந்து நிலை தடுமாறி கீழே சுமன் சரிந்துவிழ, வெறித்தனமாக தனது கூர்மையான பற்களால் அவனது கழுத்தைக் கடித்துக் குதறியதை அங்கிருந்தவர்கள் தடுக்க இயலாமல் போக, காவலரின் துப்பாக்கிக்குண்டு டாமி மீது பாய்ந்ததும் கீழே துடித்து விழுந்தது.

அப்போது டாமியால் கடிபட்ட சுமனின் மூச்சும் அடங்கியது. அதை அவனது அருகில் குற்றுயிராகக்கிடந்த டாமி பார்த்த போது, கடித்த போதிருந்த கோப முகம், ஆக்ரோசம் முற்றிலும் மாறி அவனை தனது எஜமானாகப் பார்த்து நேசத்துடன் தனது காலை எடுத்து அவனது கையின் மீது வைத்து சாந்தமாகி உயிர் விட்டது.

“வளர்த்த நாயே தன் எஜமானைக் கடித்துக்கொன்றது இதுவரைக்கும் எங்கேயுமே பார்க்காத சம்பவம்தான். ஆக்ரோசமாகக் கடிக்கும்போது இருந்த நாய் வேறு, கடித்த பின்னாடி சாந்தமா எஜமானோட கைல தன்னோட முன் வலது காலை நேசமாக வைத்தது வேறு.

ஒருவேளை செத்துப்போன விபினோட ஆவி நாயோட உடல்ல புகுந்து காட்டிக்கொடுத்ததோட, கடிச்சுக்குதறி தன்னைக் கொன்றவனைக் கொன்று வஞ்சம் தீர்த்திருக்கலாம். இறந்த பின்னாடி ஆத்மாவ ஆவின்னும் சொல்லுவாங்க, பேயின்னும் சொல்லுவாங்க. நாளைக்கு ‘நாயுக்குள்ளே புகுந்து பழி வாங்கிய பேய்’ னு தலைப்புலகூட பத்திரிகையில இந்தச் செய்தி வரலாம்” என இன்ஸ்பெக்டர் சிகன் சொன்ன போது அங்கிருந்த மற்றவர்களைவிட நளனால் உறுதியாக நம்ப முடிந்தது.

**(முற்றும்...)**

# NORTHPOLE
SHELTER FOR NEW GENERATION

## Northpole Residencies 10
No.45, Vanderwert Place, Dehiwala



Total Units 45

Starting Date
October 2022
Completion Date
December 2024

Basement + Ground floor for Car Parking & 08 Residential Floors

Normal Installment Plan: 32,000/- per sq.ft.

40% for down payment.

60% installments during the construction period.

If you are paying in full special price 29,000/- per sq.ft.



## Northpole Residencies 11
No.10, Moor Road, Wellawatte, Colombo 06

Starting Date : September 2023
Completion Date : December 2025

Ground floor + 2 floors for car parking and 11 Residential floors

Total Units 38

Normal Installment Plan
The price is 40,000/- per sq.ft. with a down payment of 40% and the remaining 60% will be paid in installments during the construction period.
If you are paying in full special price 36,000/- per sq.ft.



## Northpole Residencies 12
No.41, Vaverset Place, Wellawatte, Colombo 06

Starting Date : August 2023
Completion Date : December 2025

Ground floor + Mezzanine floor + 2 floors for car parking and 12 Residential floors

Total Units 48

Normal Installment Plan
The price is 55,000/- per sq.ft. with a down payment of 40% and the remaining 60% will be paid in installments during the construction period.
If you are paying in full special price 49,500/- per sq.ft.

NORTHPOLE ENGINEERING (PVT) LIMITED
NORTHPOLE CONSTRUCTION (PVT) LIMITED
No. 02, Mallika Lane, Wellawatta, Colombo - 06.
T. P: 011 337 0 338 |E-mail: northpole_info@yahoo.com

Hot Line: 0094 777 354177

SHELTER FOR NEW GENERATION

ADVERTISEMENT

# என் நண்பியே எல்லாமே

இசை எனக்கு
பிடிக்கும் என்றேன்
சங்கீதத்திலே பெயர்
வைத்துக் கொண்டாய்


உன்னுடன் பழகுவது
பிடிக்கும் என்றேன்
இன்னும் நெருக்கமாக
பழகிக் கொண்டாய்

உன்னை எனக்கு
பிடிக்கும் என்றேன்
அதைவிட என்னை
பிடிக்கும் என்றாய்

உன் கண்ணழகு
பிடிக்கும் என்றேன்
கண்ணால் மௌனமாய்
பேசிக் கொண்டாய்

உன்னை பிரிவதில்
விருப்பம் இல்லையென்றேன்
உன்னுடனே என்னை
அழைத்து செல்கின்றாய்

என்றும் உன் உயிர்
நண்பியாக நான்
இருக்க உன்னுடைய
இதயத்தில் எனக்கு
இடம் கொடுப்பாயா?



✍ அபி யது

# அனுபவம்



அனுபவம் உயர்கல்வி
அறிவினை வளர்பள்ளி
பனுவலில் இல்லாததும்
பாங்காய்த் தரும்சொல்லி

புத்தகப் புழுக்களுமே
புவியினை வென்றிடுமோ
பட்டறிவினில் தேர்ந்தவரே
பாதையை வகுப்பவராம்.

✍ யாதுமறியான்

# யாருக்கும் பிரயோஜனமில்லை

முள்ளில்லா கடிகாரம்
இருந்தாலும் ஓடினாலும்
யாருக்கும் பிரயோசனமில்லை
முயற்சி இல்லா வாழ்க்கையும்
அப்படித்தான்
இருந்தாலும் வாழ்ந்தாலும்
யாருக்கும் பிரயோசனமில்லை.




✍ ஜீவன்

# தனிமை கொடுமை

இரவு நேரம் நீண்டு செல்ல
கால் நரம்பு ரெண்டும் பிண்ணிக்
கொள்ள
கடும் வலியை உணர்த்தியது எந்தன்
விரல்கள்

மறதி என்ற சொல் மடிந்து போக
உன் நினைவுகள் வந்து என்னைக்
கொல்ல
கடும் குளிரை உணர்ந்த எந்தன்
தலையோ
கடந்த கால் வாழ்வை
அசைபோட்டது

நரம்பை உடைக்க
திரவ இரத்தம் உறைந்தது
உறங்கவிடாமல்
ஊசியாய் குத்தியது உன் எண்ணம்
தூசு விழுந்த விழிகள் தூங்க
மறுத்தது

பாரம் கொண்ட மனதிற்கு
தூக்கம் என்பது வெகுதூரமே
கொடுமையிலும் கொடுமை
இளமையில் தனிமை ஆகுமே
எப்போது என் துன்பம் தீருமோ?
விரைவில்
உன் நினைவில்
என் ஆவி வெளியேறுமே!

✍ கிச்சா



# காத்திருக்கிறேன்

காத்திருக்கிறேன் பெண்ணே
உன் மின்னும் கண்கள்
என்னைக் காணும் வரை
உன் உதடு குவிந்து
என் பெயர் சொல்லி
அழைக்கும் வரை

பார்த்திருக்கிறேன் பெண்ணே
உன் தோளளவு கூந்தல்
தேளாய் கொட்ட
முயல்குட்டி உன் கன்னங்கள்
என் நெஞ்சினில் நிறைந்து முட்ட

ஆர்ப்பரிக்கிறேன் பெண்ணே
மறுத்து நீ கூறிய வார்த்தைகள்
நெஞ்சில் குண்டுகளாய் வெடிக்க

தோற்றிருக்கிறேன் பெண்ணே
இதயம் நொறுங்கியது
துண்டுகள் பலவாய்
காதல் கரைந்தது
குருடன் கண்ட கனவாய்

✍ நிழல்தாசன்



# தவறிடும் போது தாங்கிடும் தோழமை

விட்ட தவறை
தட்டி வந்து உனக்கு
சொல்லிப் போயிட
வந்தவரிடம் நீ

உறுமிப் போய்
உதைத்திட முனைந்து
உன்னை நீயே
தடம் மாற்றலாமோ

புத்தி உள்ள
யாரும் இங்கே
தவறை சுட்டிட
மகிழ்ந்து போவார்

திருந்திட ஒரு
நல்ல வாய்ப்பு
தமக்கு கிடைத்திட
மாறிப் போவார்

தரணி மீது
தவித்து இருந்து
விட்ட தவறை
மீண்டும் உணர்வாரோ?

மகிழ்ந்து வாழ்ந்திட
கரும்பு போல நாம்
வாழ்வதை உணர்ந்திட
திமிரோடு வாழலாம்

நுணி வழி அடி
தேடி பயணமாக
கசந்து போகும்
அடியில் இனித்திட

பிழைத்திட வழி
பிடித்திடும் போது
பிரிந்திடும் நிலை
பிளந்திடும் வாழாது

தேடிப் போவோம்
நம்மைக் கண்டு



முட்டாள் ஒருவர்
முட்டி மோதி விட்டு
சுட்ட வந்தவரை
திட்டி நிற்பாரிங்கே

வாழும் வழியதை
தொலைத்து விட்டு
வழி மாறி தான்
விழி பிதுங்கி தனியே

நம் வழி தொடர்ந்து
விடும் தவறை சுட்ட

நம்மோடு கூடிவரும்
நல்ல உறவை
போற்றிக் கொள்வோம்
தோழமை நன்றே!

✍ நதுநசி

# காதல் இரவின் மழை நீ

வானம் குடை பிடிக்க
மழை மேகம் வந்து இருக்க
காற்றின் வேகம் அதிகரிக்க
இடியும் மின்னலும்
தந்தி அடிக்க

மழை பூமியில் வந்து இருக்க
மனம் அதைக் கண்டு ரசிக்க
பூமியின் வெப்பம் குறைந்து இருக்க
கொட்டும் மழை அதிகரிக்க

கோடை வெயில் குளிர் எடுக்க



✍ தாரா

மழையே நீ வந்து இருக்க
வார்த்தை இல்லை உனக்கு நான்
நன்றிசொல்

# சூரிய ஒளிக்குள் ஒளிந்திருக்கும் எலும்புகளின் ஆரோக்கியம்

மது, புகைப் பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். அளவுக்கதிகமாக தேநீர், கோப்பி அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.




எண்சாண் உடம்புக்கு எலும்புகளே பிரதானம் என்று சொல்லலாம். எலும்புகள் உறுதியாக இல்லாவிட்டால் உடலின் அஸ்திவாரமே ஆட்டம் கண்டுவிடும். எலும்புகளின் ஆரோக்கியத்துக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டிய மற்றும் தவிர்க்க வேண்டிய உணவுகள்.

எலும்புகளின் திடத்தை அதிகரிக்க விற்றமின் டி, கல்சியம் சத்துக்கள் அடிப்படை. இவற்றுடன் நுண்ணூட்ட சத்துகளான புரதம், மாங்கனீஸ், மக்னீசியம், பாஸ்பரஸ், துத்தநாகம், போரான், சிலிக்கான் போன்றவை எலும்புகளின் திடத்தை அதிகரிக்க அவசியமானவை. எலும்பு சார்ந்த பிரச்சினைகள் வரும்போது மருத்துவர்களை அணுகினால் அவர்களும் மேற்சொன்ன ஊட்டச்சத்துகளுக்கான சப்ளிமென்ட்டுகளைத்தான் நமக்குப் பரிந்துரைப்பார்கள். ஆனால், அந்தச் சத்துக்களை அன்றாடம் உட்கொள்ளும் உணவுகளின் மூலமே நாம் பெற முடியும் என்பதுதான் உண்மை.

விற்றமின் டி சத்தை சூரிய ஒளியின் வாயிலாகப் பெறலாம். இன்றைய பணிச்சுழலில் நாம் நமது உடலில் சூரிய ஒளிபடும் வகையில் வைத்துக் கொள்வதில்லை. தினமும் 15 நிமிடங்கள் நம் உடலில் சூரிய ஒளி பட்டாலே நமக்குத் தேவையான விற்றமின் டி கிடைத்துவிடும்.

அசைவ உணவுகளில் கறி வகைகள், கடல் உணவுகள் போன்றவற்றில் எலும்புகளின் ஆரோக்கியத்துக்கான சத்துகள் உள்ளன. தினமும் இவற்றை 100 கிராம் அளவுக்கு உட் கொண்டால் நமக்குத் தேவையான கல்சியம் கிடைத்துவிடும்.



சைவ உணவுகளில் காராமணி, ராஜ்மா, கொண்டைக்கடலை, பட்டாணி, சோயா பீன்ஸ் போன்ற தானிய வகைகள் மற்றும் பாதாம், வால்நட் போன்ற நட்ஸை உட்கொள்வதன் மூலமாகவும் பூசணி விதை, சூரியகாந்தி விதை, சப்ஜா விதை போன்றவற்றை உட்கொள்வதன் மூலமாகவும் எலும்புகளின் திடத்தை வலுப்படுத்தலாம்.

நாம் அதிகம் சாப்பிடாத அல்லது சாப்பிட விரும்பாத பிரண்டை, எள் ஆகியவற்றில் எலும்புகளின் ஆரோக்கியத்துக்கான அபரிமிதமான சத்துக்கள் உள்ளன. பிரண்டையைத் துவையலாக அரைத்துச் சாப்பிடலாம். எள்ளை சட்னியாக, பொடியாக, வெல்லம் சேர்த்த உருண்டையாக (தினமும் 2) உட்கொள்ளலாம்.

செல்கள் மற்றும் திசுக்களால் ஆனவையே எலும்புகள். அவற்றை வலுப்படுத்த புரதச்சத்து அவசியம். சைவ உணவுகளில் தானியங்கள் வாயிலாகவும் அசைவத்தில் கோழிக்கறி, மீன் மற்றும் முட்டையின் மூலமாகவும் புரதச்சத்தைப் பெறலாம்.

தினமும் 200 முதல் 300 மில்லி பால் குடிக்கலாம். இதில் கல்சியம் உள்ளது. கொழுப்பு நீக்கிய பால் நல்லது. மது, புகைப் பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். அளவுக்கதிகமாக தேநீர், கோப்பி அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். தினமும் அதிகபட்சமாக இரண்டு கப் ரீ அல்லது கோப்பி குடிப்பது போதுமானது. அதற்கு மேல் குடிக்கும்போது பிற ஊட்டச் சத்துக்களை உடல் உட்கிரகிப்பது தவிர்க்கப்படும். அது இரத்தச் சோகை, விற்றமின் குறைபாடு போன்றவற்றை ஏற்படுத்தி, ஒட்டு மொத்த ஆரோக்கியத்தையும் பாதிக்கும். ■

---

# நோய் எதிர்ப்பு சக்தி தரும் பெரிய நெல்லிக்காய்

பெரிய நெல்லிக்காய் சாப்பிட்டால் சளி பிடிக்கும் என்று பெரும்பாலானோர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை என்ன தெரியுமா?

பெரிய நெல்லிக்காய் பெருமளவு விற்றமின் ‘சி’ நிறைந்தது என்பது நமக்கெல்லாம் தெரியும் என்றாலும், கொரோனா காலகட்டத்தில்தான் பெரிய நெல்லிக்காயின் மகத்துவமும் அது தருகிற நோய் எதிர்ப்பு சக்தியும் பரவலாகத் தெரிய ஆரம்பித்தது.

நெல்லிக்காய் இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுக்குள் வைக்கும். உடம்பில் இருக்கிற ரணங்களை சீக்கிரமாக ஆற்றும். வயிற்றுப் புண்களைக் குணமாக்கும். இதயத்துக்கும் நல்லது. நோய்த்தொற்றுகள் வராமல் காக்கும். நம் உடம்பில் வளர்சிதை மாற்றம் நிகழும்போது ஒவ்வொரு செல்லில் இருந்தும் கழிவுகள் வெளியேறும். இந்தக் கழிவுகள் வெளியேறவில்லை என்றால், உடலில் வீக்கம் ஏற்படுவதில் ஆரம்பித்து புற்றுநோய் வரை வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. பெரிய நெல்லிக்காயில் உள்ள பாலிபினால், டேனின், ஃப்ளேவினாய்ட்ஸ் போன்றவை நோய் எதிர்ப்பு சக்தியைத் தந்து மேலே சொன்ன பிரச்சினைகள் வராமல் தடுப்பவை.

பெரிய நெல்லிக்காய் சாப்பிட்டால் சளி பிடிக்கும் என்று பெரும்பாலானோர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இதில் இருக்கிற நோய் எதிர்ப்பு சக்தி நம் உடம்பில் இருக்கிற கபத்தை வெளியேற்றும், அதைத்தான் நாம் சளி பிடித்துக்கொண்டதாக நினைக்கிறோம். ஆனால், இரவு நேரத்தில் நெல்லிக்காய் சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு ஏற்படும்.




தண்ணீரில் போத்தலில் ஒரு நெல்லிக்காயை வெட்டிப் போட்டு, அதில் தண்ணீரை ஊற்றி விடலாம். நெல்லிக்காய் ஊறிய இந்தத் தண்ணீரைக் குடித்தாலே குழந்தைகளுக்குப் போதுமான விற்றமின் ‘சி’ கிடைத்துவிடும். ஆனால், குழந்தைகளுக்கு மாலை 5 மணிக்கு மேல் நெல்லிக்காய் சாப்பிடக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நெல்லிக்காய் சாறு இரத்தத்தில் சீனியின் அளவையும் உயர் ரத்த அழுத்தத்தையும் கட்டுக்குள் வைக்கும் என்பதால், இந்தப் பிரச்சினைகளுக்கு மாத்திரை எடுத்துக் கொள்பவர்கள், ஓர் இயற்கை மருத்துவரிடம் தினசரி எத்தனை நெல்லிக்காய் சாப்பிட வேண்டும் என்பதைக் கேட்டு தெரிந்து கொண்டு அதன் பிறகு சாப்பிடலாம்.

பெரிய நெல்லிக்காயையோ, அதன் சாற்றையோ நேரடியாக எடுத்துக்கொள்ள முடியாதவர்கள், நெல்லிக்காயுடன் வறுத்த உளுந்து, காய்ந்த மிளகாய், தேங்காய் சேர்த்து அரைத்துத் துவையலாகச் சாப்பிடலாம்.

ஒன்று முதல் 3 வயதுக் குழந்தைகளுக்கு 15 மில்லி கிராமும் 4-13 குழந்தைகளுக்கு 25-45 மில்லி கிராம் வரையிலும் வளர்ந்தவர்களுக்கு 90 மில்லி கிராம் வரையிலும் போதுமானது.

ஆனால், 100 கிராம் நெல்லிக்காயில் 600 மில்லி கிராம் விற்றமின் ‘சி’ இருக்கிறது. பெரிய நெல்லிக்காயை அழுத்தினால் ஆறு கீற்றுகளாக வரும். பெரியவர்கள் அதில் இரண்டு கீற்றுகளை மட்டும் தினசரி சாப்பிட்டால் போதும். சாறாகக் குடிக்கிறீர்கள் என்றால், அரை நெல்லிக்காய் போதும். குழந்தைகளுக்குத் தினமும் ஒரு கீற்று போதும்.

விற்றமின் ‘சி’ நீரில் கரையும் தன்மை கொண்டது என்பதால், அதிகப்படியானதை உடம்பால் சேமித்து வைத்துக்கொள்ள முடியாது. தேவையானதை எடுத்துக்கொண்டு மீதத்தை உடல் வெளியேற்றிவிடும்.

நெல்லிக்காய் அதிகமாகச் சாப்பிட்டால், ஒரு சிலருக்கு வாந்தி உணர்வு, வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சினைகள் வரலாம். மற்றபடி பெரிதாக வேறு எந்தப் பிரச்சினையும் வராது. ■

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய இரதோற்சவம்












# இந்திய கப்டன் மந்தனாவைப் பார்க்க 1270 கி.மீ தாண்டி வந்த சீன ரசிகர்




இந்திய மகளிர் கிரிக்கெட் அணி கப்டன் ஸ்மிரிதி மந்தனாவைப் பார்க்க 1270 கிலோமீற்றர் பயணித்துள்ளார் ஒரு தீவிர சீன ரசிகர். சீனாவில் கிரிக்கெட் பிரபலம் இல்லை என்பதால் அங்கு நடந்த ரி20 போட்டிகளைக் காண பெரிய கூட்டம் வரவில்லை. நூறு பேருக் குள்தான் மக்கள் மைதானத்தில் இருந்தனர். இந்த நிலையில், சீன ரசிகர் ஒருவர் “மந்தனா ஒரு கடவுள்” எனும் பதாகையை ஏந்திக் கொண்டே போட்டியைக் கண்டு கொண்டிருந்தார். அதைக் கண்ட இந்திய ஊடகங்கள் ஆச்சரியத்தில் அவரை மொய்க்கத் துவங்கினர். அவரது பெயர் வெய் ஜூன்யு ட்ரூ. 25 வயது இளைஞரான அவர் பீஜிங்கில் இருந்து 1270 கிலோமீற்றர் பயணம் செய்து கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் ஹாங்சோ நகருக்கு வந்திருக்கிறார். மந்தனாவைப் பார்க்க மட்டுமே அவர் இவ்வளவு தூரம் வந்ததாகக் கூறினார்.

சீனாவில் கிரிக்கெட் போட்டிகள் ஒளிபரப்பப் படுவதில்லை என்ற நிலையில், எப்படி அவர் இந்திய அணி கப்டனின் தீவிர ரசிகராக மாறினார் என்பது குறித்து கேட்டனர். அப்போது அவர் அதற்கு பதில் அளித்தார். 2019 இல் ஒருநாள் போட்டி உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து - நியூஸ்லாந்து இடையே சூப்பர் ஓவர் நடைபெற்றது. அது உலகம் முழுவதும் வைரலான நிலையில், சீனாவில் அது சூப்பர் ஓவர் வீடியோவைப் பார்த்துள்ளார். அதன்பின் தொடர்ந்து கிரிக்கெட் ஹைலைட் வீடியோக் களைப் பார்த்திருக்கிறார். இரு ஆண்டுகள் முன்பு நடந்த இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து இடையே ஆன முத்தரப்பு மகளிர் கிரிக்கெட் தொடரைப் பார்த்து இருக்கிறார். அப்போது அதில் ஸ்மிரிதி மந்தனாவின் ஆட்டத்தைப் பார்த்து அவரின் ரசிகராக மாறி இருக்கிறார். தற்போது சீனாவில் மந்தனா விளையாடுகிறார் என்பதை அறிந்து ஒரு நாள் இரவு முழுவதும் பயணம் செய்து வந்து மந்தனாவை நேரில் கண்டு ரசித்துள்ளார். ■



# டோனியின் உலக சாதனையை உடைத்த இம்ரான் தாஹிர்

மேற்கு இந்தியாவில் கோலாகலமாக நடைபெற்று வந்த 2023 கரீபியன் லீக் ரி20 தொடரில் லீக், பிளே ஆஃப்பில் செயற்பாடுகளை வெளிப்படுத்தி கைரன் பொல்லார்ட் தலைமையிலான த்ரிபங்கோ நைட் ரைடர்ஸ் அணியை மாபெரும் இறுதிப் போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்த இம்ரான் தாஹிர் தலைமையிலான கயானா அமேசன் வாரியர்ஸ் முதன் முறையாக சம்பியனாகியது.

உலகிலேயே அதிக வயதில் ரி20 தொடரின் கிண்ணத்தை வென்ற கப்டன் என்ற இந்திய ஜாம்பவான் எம்.எஸ் டோனியின் சாதனையை தகர்த்து மாபெரும் உலக சாதனை படைத்துள்ளார் இம்ரான் தாஹிர்.

மாபெரும் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய த்ரிபங்கோ 18.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 94 ஓட்டங்கள் பொல்லார்ட் 0, ரசல் 3 ரன்களில் அவுட்டாகி ஏமாற்றத்தைக் கொடுத்த நிலையில் அதிகபட்சமாக கேசி கார்ட்டி 38 ரன் ஓட்டங்கள் எடுத்தார். டயானா சார்பில் ட்வயன் பிரிட்டோரியஸ் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

93 என்ற ஓட்ட எண்ணிக்கையைத் துரத்திய கயானாவுக்கு சாய்ம் ஆயுப் 52 ஷாய் ஹோப் 32 ஓட்டங்கள் எடுத்து 14 ஓவரிலேயே எளிதாக வெற்றி பெற வைத்தனர்.

சம்பியனான கயானா அணியின் கப்டன் இம்ரான் தாஹிர் போட்டியின் முடிவில் பேசியது அனைத்து ரசிகர்களையும் நெகிழ்ச்சியடைய வைத்தது. 44 வயதாகும் தாம் இதற்கு முன் எவ்விதமான கப்டன்ஷிப் அனுபவத்தையும் கொண்டிருக்காத சூழ்நிலையில் இத்தொடரில் கயானா அணியின் கப்டனாக நியமிக்கப்பட்ட போது அனைவரும் கிண்டலடித்ததாக அவர் கூறினார். இருப்பினும் அந்தக் கிண்டல்களை உத்வேகமாக எடுத்துக் கொண்ட தம்மால் இத் தொடரில் வெற்றி காண முடியும் என்று ஆரம்பத்திலேயே இந்திய வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆதரவும் நம்பிக்கையும் கொடுத்ததாக இம்ரான் தாஹிர் தெரிவித்தார். இறுதியில் அந்தக் கிண்டல்களை பொய்யாக்கி சாதித்த அவர் அஸ்வினுக்கும் தமக்கும் ஆதரவு கொடுத்த அனைவருக்கும் கலங்கிய கண்களுடன் நன்றி தெரிவித்தது ரசிகர்களின் மனதைத் தொட்டது.

44 வயதிலும் அனைத்து வீரர்களையும் சிறப்பாக வழி நடத்தி கோப்பையை வென்றுள்ள அவர், உலகிலேயே மிகவும் அதிக வயதில் ஒரு ரி20 தொடரின் கிண்ணத்தை வென்ற கப்டன் என்ற இந்திய ஜாம்பவான் எம்.எஸ் டோனியின் சாதனையைத் தகர்த்து மாபெரும் உலக சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் கடந்த மே மாதம் நடைபெற்று முடிந்த ஐ.பி.எல் 2023 தொடரில் எம்.எஸ்.டோனி 41 வருடம் 325 நாட்களில் சம்பியனாகி சாதனை படைத்திருந்தார்.

டோனியைவிட 3 வருட வித்தியாசத்தில் 44 வருடங்கள் 181 நாட்களில் இத்தொடரின் கோப்பையை வென்றுள்ள இம்ரான் தாஹிர் எளிதில் உடைக்க முடியாத புதிய சாதனை படைத்து சாதிப்பதற்கு வயது ஒரு தடையில்லை என்பதை நிரூபித்து உலக சாதனை படைத்துள்ளார்.

அவர்களுக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானின் மிஸ்பா-உல்-ஹக் 41 வருடம் 271 நாட்களில் 2016 பி.எஸ்.எல் தொடரை கப்டனாக வென்று இப்பட்டியலில் 3 ஆவது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. ■

கட்டை விரலில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்த பின்னர் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் அணியுடன் டிம் சவுதி இணைவார் என்று நியூஸ்லாந்து கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

இந்த மாதத் தொடக்கத்தில் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் கேட்ச் எடுக்க முயன்ற வேகப்பந்து வீச்சாளர் சவுதியின் கட்டை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

இந்தியாவில் நடைபெறும் 50 ஓவர் உலகக் கிண்ணத்தில் நியூஸ்லாந்து தனது முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியனான இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

“டிம் சவுதியின் உடைந்த வலது கட்டைவிரலில் அறுவை சிகிச்சையில் இருந்து மீண்டு வருவதால், இந்த வார இறுதியில் இந்தியாவில் பிளாக் கப்ஸில் சேர அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது” என்று அறிக்கையில் தெரிவித்துள்ளது. ■



# அறுவை சிகிச்சைக்குப் பின்னர் அணியில் இணைவார் டிம் சவுதி

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 30.09.2023 அன்று வெளியிடப்பட்டது.